பச்சைமயிலில்வரு வீரவேன்முருக
துட்டநிருதர்குல காலவானவர்கள்
பத்தியுடனடியில் வீழவாழ்வுதவு பெருமானே.

பொது.

51. தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன—தனதான.

குறிப்பறிய குழற்குமதி
நுகற்புருவ விலுக்குமுரு
குழைக்குவடு விழிக்குமெழு குழலாலும்

கொடிப்பவள விதழ்க்குமிரு
சுடர்த்தரள நகைக்குமமு
திலுக்குமிக வுறத்தழுவு குறியாலும்

துறப்பெரிய தனத்துமண
நடைக்குமினி னிடைக்குமல
ரடிக்குமிள நகைக்குமிள மறாதே

உதத்தியெறொத்தபொரு
ளளித்தருளி யரிப்பிரம
னெப்பரிய பதக்கமல் மருளாயோ

உழத்தடரு மரக்கரணி
தருக்குலைய நெருக்கிபொரு
களத்திலவர் சிரக்குடர்கள் கதிரோடமா [illegible]

உழைத்தருளி யலக்கணுறு
சுரர்க்கவர்கள் பதிக்குரிமை
யளித்திடை யருத்தருள மயில்வீர

செயித்துவரு நரித்திரள்கள்
நிடுக்கிட்டன் மருப்பையய
லைத்திறெடு பறித்தயர்செய பெருஞ்சாத்ன

செலக்கருதி யறக்கொடிய
சிலைக்குறவர் கொடித்தனது
முலைத்தனமு முறத்தழுவ பெருமாளே.

வேலூர் *

52. தனந்த தத்தன தானான தானன
தனந்த தத்தன தானான தானன
தனந்த தத்தன தானான தத்தன — தந்ததான.

நிறைந்த துப்பிதழ் தேனூறல் நேரென
பறந்த ரித்தக ளாலால் நேரென
நெடுஞ்சு ரிக்குழல் சீமூத நேரென — விஞ்சிமேலே

நெருங்குபொற்றன பாமேரு நேரென
மருங்கு லிட்கள வாகாச நேரென
நிதம்ப நற்பணி தாருகு மேயென — வெந்துநாளும்

குறைந்த புத்தியில் வாதாடியாதர
வழிந்து மெத்தையின் மேல்வீழ மால்கொடு
குமண்டை யிட்டிடை சோர்வேளையாக முலைக்குசிலே

குறைக் கிலேப்புற மாமாயை வாழ்வரு
மடந்தை பக்கொருகோமளமாகிய
கொடிக்க டந்திடை மூழ்காமலேபத மென்முகேசர்வே

மறைந்துசக்ரிபர் போராட லேயொளி
பிறந்துநற்றப வாள்மீன வேயவன்
மனங்க ளிக்கிட மாபெரு நேரனு — செஞ்சவாவி

மதஞ்செ குத்திட வீரன தோர்கணை
வளைந்த வீர்சர மீதேவ வானரம்
வளைந்து சுற்றிலு மேபோடி யாடிய எண்கிமேவ
அறந்த ழைத்தது மாசேது மாகடல்
கடந்த டைத்ததின் மேலேறி ராவண
னுடன்கு லத்தொடு நீர்போரோடு நாரணன் மருகோனே
வனங்கள் மைத்தன வேலேக லாமயில்
விளங்கு செய்ப்பதி வேலாயு தாவறு
களிந்த பொற்பெரு மாளேநின் மெய்மிய தம்பிரானே,

திருவருணை.

53. தான தத்த தந்த தான தத்த தந்த
தான தத்த தந்த —— தனதான.

தோதகப் பெரும்ப யோதரத்தி யர்க்கு
தோகை யர்க்கு நெஞ்ச மழியாதே
சூலை வெப்பு டாக்க மாதி பித்த மென்று
சூழ்பிணிக்கு ழைந்து ளுழலாதே
பாதகக்க மதூதர் கைப்பிடித்த
பாசம் விட்டெ றிந்து பிடியாதே
பாவலர்க்கு கந்த பாவலர்க்கு வைத்த
பாடல் மிக்க செஞ்சொல் தாவேனும்

திருப்புகழ்.

வேத மிக்க விந்து நாதமெய்க் கடம்ப
　　வீர பத்ர கந்த　　　　　　　　முருகோனே
பேருவப்பி லந்து சூரனைக் கடிந்து
　　வேலெயிற்று ணைந்த　　　　　　கதிர்வேலா
கோதை பொற்கு றிஞ்சி பாது கச்சணிந்த
　　கோம ளக்கு றும்பை　　　　　　பணிவோனே
சோலை சூழ்ந்துயர்ந்த சோண வெற்பி லங்கு
　　கோபு ரத்த மர்ந்த　　　　　　பெருமாளே.

சோலையிலே.

ஜதி.　தானனந்த தானதனந் தானதனந் தானனந்த
　　தானனந்த தானனந்த—தனதான.

செவிபடக் தாவுமுருக்
　　தேகனைப் சிறிதக்
　　தூறவியப் பேறனிழக்　　　　　　கடையாலே
தெனிரதக் தெமுழுகப்
　　பாகுவிகர்க் காரமிதக்
　　தேறலெனக் கூறுமொழிச்　　　　　செயலாலே
ஆவிகளைப்பொதும்லவிற்
　　கற்றுவள தாலதத்
　　தரிக்குத்தாதும்பலம்　　　　　　அடியேனே

சையினைத் தூரவிடத்
தேபுகவிட் டேக்ருபைநற்
றுளிணையைச் சேரவெனக் கருள்வாயே
காலினைமெய்ப் பாதமெடுத்
தேயுதையிட் டேமதனைக்
காயவெரித் தேவிதியிற் றலையூடே
காசினியிற் காணவிரப்
போன்மதியைச் சூடியெருத்
தேவிரித் தூறுதிரைக் கடன்மீதில்
ஆலமிடற் றுணைகரித்
தோலையுடுத் திமயிதத்
தாடியிடத் தேயுமையைவைத் [illegible]
பாருயினைச் சூரனைவெற்
பேழையில்தொட் டாவித்துனிக்
தாகிதிருச் சோலைமலைப் பெருமாளே.

பொது.

தனதனன தத்தந்த தனதனன தத்தந்த
தனதனன தத்தந்த — தனதான.

பழுதறவோ திக்கடந்து
பகர்வனதி ரத்தடக்கு
[illegible] திரித்து மதிராசன

பரிமளபா ணத்தயர்ந்து
பனிமடலூர் தற்கிளைந்து
பரிதவியா மெய்த்தளர்ந்து மயல்கூர

அழுதழு தாசைப்படுங்க
ணயிலவமா தர்க்கிரங்கி
யவர்பிரமா ணத்துநெஞ்ச மறைபோய்பின்

றழிவதுதான் மிற்பயந்த
விதிவசமோ மற்றையுன்ற
னருள்வசமோ விப்ரமத்தெ ரிகிலேனே

எழுதருவே தத்துமன்றி
முழுதினுமாய் நிற்குமெத்தை
யெனவொருஞா னக்குருந்த ருள்பேறு

மிருவுருவா கித்துலங்கி
யொருகணதூ ணியிற்பிளந்து
விரணியன்மார் பைப்பிளந்த தனியாண்மை

பொழுதிசையா விக்ரமன்றன்
மருகபுரா ரிக்குமைந்த
புளகபடீ ரக்குரும்பை யுடன்மேவும்

புயகிரிவா மச்சிலம்பின்
வசைசரயா னுக்குகந்து
புன்மிசைமேயா டிப்புகுந்த பெருமானே.

பெருப்பற்றப்புலியூர் *

56. தனத்தத் தத்தன தானன தானன
தனத்தத் தத்தன தானன தானன
தனத்தத் தத்தன தானன தானன-தனதான.

விடுங்கைக் கொத்தக டாவுடை யானிடை
படுஞ்சிக் கச்சிறை யானவ னேமுகம்
விழிக்கப் பட்டற வேயுடன் போய்கரு விடமாலே

விளம்பத் தக்கன ஞானமு மானமும்
விரும்பத் தக்கன போகமு மோகமும்
விடுஞ்சுத் தச்சவ மாவெளி யாயுயிர் வி[illegible]ளில்

இடுங்கட் டைக்கிரை யாவடி யேனுட
லிருந்திட் டுத்தம ராவர் சோவென
விடங்கட் டுச்சுடு காடுபு காமுன மனதாலே

யிருந்திட் டுப்பெற வேமதி யாயினு
மிரந்திட் டுப்பெற வேவிதி யாயினு
யிரண்டிற் றச்சுதெ தாருகிய மானவை யிசைவாயே

கொடுங்கைப் பட்டம ராமர மேழுட
னடுங்கச் சுக்ரிப னோடம ராடிய
குரங்கைச் செற்றம சோதகி தூளெழ வருநேயனே

---

* சிதம்பரம்.

துலுக்கப் பட்டநி சாசரர் கோவென
விசம்பரவைக்குட்டழ லோமெனழ நீளடி
குப்பூரணைக் குத்திர ராவண னார்முடி படியூடே
சிந்தித் தொட்டச ராசர நாரணர்
பரியந்திட் டக்கன மாமரு காவயன்
ப்ரபஞ்சத் துக்கொரு பாவல னானென விருதாளும்
பாசண்டச் சொற்சிவ வேதசிகாமணி
பரபஞ்சத் துக்குள வானச தாசிவம்
பெரும்பற் றப்புலி யூர்தனில் மேவிய பெருமாளே.

பொது.

57 தனத்த தானன தானன தந்தன
தனத்த தானன தானன தந்தன
தனத்த தானன தானன தந்தன—தனதான

கறுத்தநீர்விடு கூர்வேலெல னுங்கடை
சிவத்து நீடிய வாய்மீள வன்குழை
கடக்க வோடிய வாலாள கஞ்செண லஞ்சரீடே
கபர்க்க ணார்கணி வாயுற லுண்டவர்
கறுத்த மாசுழு மேகிக பணிகொடி
தவக்க மார்பொடு பாவை குங்கும குன்றழுந்தி

உருத்த மார்புமுத தார்தால டங்களு
மறுத்துநேரிய கூர்வாள கம்பட
வடுத்த வாடையும் வேறாய் தன்றுசு முன்றுயிழு

முருக்கு நாபியில் மூழ்காம ருங்கிடை
செருக்கு மாதர்தம் வாரார் தனங்களை [வேன்
பொழித்ததோர்கலை காணுக நின்இருபை யென்சேர்

சிறந்த நூபுர பாதார விந்தமு
முடித்த மாலையும் வாரார்த னங்களு
கொடுத்தி லேபடு வேலான கண்களும் வன்பொடு

செறித்தவோதியு நாயேன்ம னம்பரி
தவிக்க பால்வர லாமோக லந்திட
நினைக்க லாமெனை வேல்வேடர் கொம்புடன்கூர்வாய்

மருக்து வாரிதி கேகோவெ னும்பா
வெறுத்து ராவணன் வாணுளை ய. பினில்
வனைந்த பாமனு மேவார்பு ரங்களு மண்டமேவ

வளர்த்த காதையு மாறுண குன்றமு
பனித்துலோகமும் மேகாகமங்களு
மதித்தசேவக வாணுளு மும்பர்கள் தம்பிரானே.

---

௯8. தனதத்தன தத்தனதத்தன
தனதத்தன தத்தனதத்தன
தனதத்தன தத்தனதத்தன — தனதான.

புருவத்தை நெரித்து விழிக்கயல்
பயிலிட்டெவ ருட்டு மதிதிரு
புதுவட்டையி ணக்கியளிக்குல இசைபாடப்
புயல்சற்றவி ழ்த்துநிரைத்தொளி
வளையிட்டக ரத்தையசைத்தகில்
புனைமெத்தைபடுத்தபளிக்கறை தனிலேறி
சரசத்தைவி ளைத்துமுலைக்கிரி
புளகிக்கவ ணைத்துகைக்குழி
தனைவைத்துமுகத்தை முகத்திட னொன்றமேவித்
தனிவித்தொ ரத்தாத்துமி
ழமுதத்தைய ளித்துருக்கியல்
தருமித்தைய கற்றியுனைத்தொழு முயல்வேனோ
பரதத்தைய டக்கிநடப்பவர்
திரிபுரத்தை யெரிக்கநகைப்பவர்
பரவைக்குள்வி டத்தையிடற்றிடு பவர்நீடு
காதப்பணை யுற்றமிகப்பசி
ரதியுற்றவி ரதத்தைநிரத்துவ
ரகத்தைதபொ ருப்பனிருப்பவ குமையாள

சுப்ரித்தரம னத்துறைறவித்தகர்
பலரிபத்தர்ப வத்தைதவறுப்பவர்
அடலைப்பொடி யைப்பரிசிப்பவர் விடையேறித்

துணைபொருத்தப தத்தவமெற்றிடு
மதலைக்கடி முத்தர் கருத்தமர்
தில்லைத்தலக்குருபரகுருநித்தருள் பெருமாளே.

பழநி.

59. தனன தனதன தனன தனதன
தானதானன — தனதான.

குவளைபொருதிருகுழையைமுட்டிய
கோலவெல்விழி மடவார்தங்

கொடியமருகமத புளகத்தனகிரி
கூடிநாடொறு மயலாகி

துவளவருகிய சாசுவிதமதில்
சோரவாரிதி யதூடே

சுழலுமெனதுயி ரழியுமுனமுயர்
தோகைமீதினில் வரவேணும்

கவளகரதல கடகவிகடக
போலபூதர முகமான

கடவுள்கணபதி பிறகுவருமொரு
காரணாகதிர் வடிவேலா

பவளமரகத கனகவயிரக
　　பாடகோபுரம் ரஞ்சேருப
　பரியமிடறிய பழனிமலைவரு
　　பாவலோர்புகழ் பெருமாளே.

---

60. தனதந்த தத்ததந்த தத்ததந்த
　　தனதந்த தத்ததந்த—தனதான.

மதவெங்க ரிக்கிரண்டு
　　வனுகொம்பெ னத்திரண்டு
　　வளருந்த னத்தணிந்த மணியாரம்
வளர்செங்க திர்க்குவிந்து
　　வொளிகண்டெ னத்துலங்கி
　　காருந்தி கைத்திரங்க தருமாறா
இதமிஞ்சி தப்ரியங்கொ
　　ணகைகொஞ்சு நற்குணங்க
　　ளிலையின்றெ னக்கலங்கி விலையாடி
பிசெங்கை யற்புணர்ந்து
　　வலம்வந்து லைப்புகழ்ந்து
　　தொழின்று பொற்பதங்க டாவேனோ

ந்தியுந்தி ருக்கரந்தை
    மதியுஞ்ச டைக்கணிந்த
    டைம்ப ருற்றிருக்க
லந்தகை கையப்பிடித்து
    மகரஞ்சி ரத்தொடங்கை
    கலந்துங்க வெற்றிமுந்து   திரமோதுஞ்
னைதையும் படிக்கொரம்பு
    வணைமுன்றொ டுத்தகொண்டல்
    வணர்செங்க ணச்சுதன்றன்   மருகோனே
தினமுங்க ருத்துணர்ந்து
    சுரர்தின் றுனைப்பணிந்த
    திருவம்பலத் தமர்ந்த   பெருமாளே.

---

61. தானனா தந்தனந் தானனா தந்தனந்
    தானனா தந்தனந் — தனதான.

சாதன்மோ கந்தருங் கோதையார் கொங்கைசேர்
    காரநா தஞ்செழுங்   கனிவாய்கள்
காளகூ டங்கொடுங் காலரூ பம்பொருங்
    காமபாணஞ்சுரும்   பினம்வாழும்
ஓதிகார் செஞ்சொலேன் பாகுதே   னென்றயர்ந்
    தோதமோ கந்தவென்   றளையாதே

பூசலா மெய்ப்புலன் ஞுரியே சென்றுநின்
றேயுமாவொன்றையுங் கருதாதே
தாதகி சண்பகம் பூசுமார் சநதமார்க்
தாரவாசந்திசக் கணீடுஞ்
சாயவே தண்டவெங் கோபகோ தண்டசங்
தாணமா தெங்கள்பைம் புனமேவும்
நீதிலா வஞ்சியின் பாதமே கொண்டிடுஞ்
சேகராதென்குடங் கைதயில்வாழ்வே.
தேவிபா கம்பொருந் தாதிகா தன்றெருழுந்
தேசிகா வும்பர்தம் பெருமாளே.

---

62. தான தாத்த தனதன தானதாத்த தனதன
தான தாத்த தனதன—தனதான.

ஆலமேற்ற விழியினர் காலநீட்டி யழுதழு
தாகமாய்த்துமுறைமுறை பறைமோத
வாடல்பார்க்க விலையெழு பாடைகூட்டி விரைபடு
யானமேற்றி யுறவினர் ரயலாகக்
காலமாச்சு வருகென வோலைகாட்டி யமபடர்
காவலாக்கி யுயிரது கொடுபோகக்
காயயாக்கை பொடிபட நாகமில்வாய்த்த கழலிணை
காதலாற் கருதுமுணர் தருவாயே

வேலகீர்த்தி விரதனை சிலபார்த்தி பகலைக
வியாழிகோத்த மருவிய முருகோனே
வேதனூட்டழல் விளைவுள வேனல்சார்த்த சிறுமியை
வேடனூட்டில்பழிபடு மிளையோனே
நூலமேத்த வழிபடு மாறுபோர்க்குமதவினை
நாணல்பூத்த படுகையில் வருவோனே
ஈதுபோற்றியெனமுது காதைகேட்பவனுடைய
ஞானவார்த்தை யருளிய பெருமானே.

சோணாசலம்.

88. தனதன தானதன தனதன தானதன
தனதன தானதன—தனதான

[illegible]
[illegible] வலையாகும்
[illegible] பாவிகள்
[illegible] முகிழ்தாய
[illegible]
[illegible] வகைகூற
[illegible] யாபாசனை
[illegible] பெருகாதே
[illegible]
[illegible] மயிராம

மரகத நாராயணன் மருமக சோணாசல
வதிபச தாகாலமு மிளையோனே
புடபதி சாயாபதி சுரர்பதி வாழ்வேபெற
வுபர்மயின் மேலேறியே வரிதாக
வுயரிய மாகாசமும் நிருதனு நீறும்விழ
வொருதனிவேலாவிய பெருமாளே.

---

64. தானதாத் தத்ததந்த தானதாத் தத்ததந்த
தானதாத் தத்ததந்த—தனதான.

இடருக் கிடராகிய கொடுமைக்கணை வெல்வரு
மிறுதிச்சிறு கால்விரு மதனாலே
பியலைத்தரு கானக முயலைத்தரு மேனியி
லெரியத்தரு மாமதி நிலவாலே
தொடராக்கொடு வாகையி லடையக்கரை மேலமீ
தொலையத்தினி வீசிய கடலாலே
துணையற்றினி பூமல ரணையிற்றினி யெயுயிர்
துவளத்தகு மோதுயர் தொலையாதே
வட்பொற்குல மேருவின் முடுகிப்பொரு சூரனை
மடியப்படை யேவிய வடிவேலா
மறவக்குல மாமொரு குறமெய்த்திரு மாமகள்
மகிழப்புண மேவிய மயில்வீரா

அடர்பட்டுறு சேதகி மடமிற்றழை சேர்வய
லருணைத்திரு வீதியி லுறைவோனே
அவனுத்திரு மாலொடு சிவனுக்கிமை யாவிழி
யமரர்க்கரச தாகிய பெருமாளே.

௬௫. தான தனதன தான தனதன
தான தனதன—தனதான.

பாதிமதிநதி போதுமணிசடை
நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள்
பாதம்வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருள்
மாயனதுதிரு மருகோனே
காலனெனையணு காமலுனதிரு
காலில்வழிபட வருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல
காளும்வகைதரு சிறைமீளா
ஆடுமயிலினி லேறியமரர்கள்
சூழவலம்வரு மிளையோனே

சூதமிகவளர் சோலைமருவுக
வாமிமலைதனி லுறைவோனே
சூரனுடலற வாரிசுவறிட
வேலைவிடவல பெருமானே.

திருத்தணிகை.

56. தனதந் தனதத் தனதத்
தனதந் தனதத்—தனதான.

குயிலொன் றுமொழிக் குயினின் றலையக்
கொலையின் பமலர்க் கணையாலே
குளிருந் தவக் குலசந் த்ரவொளிக்
கொடிகொங் கையின்முத் தனலாலே
புயல்வந் தெறியக் கடலின் றலறப்
பொருமங் கையருக் கலராலே
புயமொன் றமிகத் தளர்கின் றதனிப்
புயம்வந் தணையக் கிடையாதோ
கயிலங் குலையத் தடமுந் தசுரச்
சமனின் றலையப் பொரும்வீரா
க்ருமங் கைவனக் குயமங் கையர்மெய்த
தனமொன் றுமணித் திருமார்பா
பயிலுங் சகனப் பிறைதண் பொழிலிற்
பணியுந் தணிகைப் பதிவாழ்வே

பாமன் பணியப் பொருளன் றருளப்
பகர்செங் கழனிப் பெருமாளே.

பொது.

67. தந்த தானன தந்த தானன
தந்த தானன—தனதான.

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி முகம்வேய்தோள்
கண்டு காவனை கொண்ட தோள்களி
லொன்று காதலி லிருகோடு
மண்டி மார்பினில் விண்ட தாமென
வந்து கூர்முலை மடவார்தம்
வஞ்ச மாமதில் நெஞ்சு போய்மடி
கின்ற மாயம தொழியாதோ
கொண்ட லார்குழல் கெண்டை போல்விழி
கொண்டு கோகில மொழிகூறுங்
கொங்கை யாள்குற மங்கை வாழ்தரு
குன்றின் மால்கொடு குளிராகம்
விண்டு மாவன வண்டு சூர்கடல்
வெப்ப மேதினி தனின்மீளா
வென்றி யாவையு மின்றி வேளையும்
வென்று மேவிய பெருமாளே.

குருகிரி *

68. தனதன தத்தத் தித்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தததன — தனதான.

தலைமயிர்கொக்குக் கொக்கநரைத்துக்
கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தலைமாறி
தடிகொடு தத்திக் கக்கல் பெருத்திட்
டசனமும் விக்கிச் சத்திய டுத்துச்
சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்
சிலதயி லந்திட் டொக்கவெ ரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளிய வடித்துத் துற்றிட லுற்றிட் டுயிர்போமுன்
சிலபுகழ் கற்றுச் சொற்கள் பயிற்றுத்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனன மறுக்கைக் குப்புர முத்திக் கருள்வாயே
கலைநுவி சித்துப் பற்கறை யிட்டுப்
புரவிசெ லுத்திக் கற்கொடு வெற்பைப்
பகடுந டத்தித் திட்டென வெட்டிப் பொருசூரன்
கன்படை கெட்டுத் தட்டற விட்டுக்
குரைகடல் குக்குக் குக்கிட வெற்றிக்
களிமயி லைச்சித் ரத்தின டத்திப் பொருகோவே

* சுவாமிமலை.

குலிசன்ம கட்குப் பொற்புய முற்றுக்
குறவர்ம கட்குச் சித்தமு முற்றுக்
குளிர்புன லூற்றுத் தத்துபு னத்திற் றிரிவோனே
கொடியபொ ருப்பைக் குத்திமு றித்துச்
சமரம்வி ளைத்துத் தற்பர முற்றுக்
குருதியி லிற்சித் தத்தொ டிருக்கும் பெருமாளே.

௨௯. தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன—தனதான.

அளகநிரை குலையவிழி குவியவளை கலகலென
வமுதமொழி பதறியெழ வணியார
மழகொழுகு புளகமுலை குழையவிடை துவளமிக
வமுதநிலை யருள்பரவ னதிவேகம்
உளமுருக வருகலவி தருமகளிர் கலவிதனி
லுழலுமது சுவடுமதி யொழியாதோ
யுலகடைய மயிலின்மிசை நொடியளவில் வருமளவி
லுனதுமது மலரடியை யருள்வாயே
வளையுமலை சுடல்சுவற விடுமகழி வரதனருள்
மருதினொடு பொருதருளு மபிராம
வரியரவின் மிசைதுயிலும் வரதசய மகள்கொழுநன்
மருகமயில் முடுகிவிடு நிருதேசன்

தளமுறிய வரைதகர வசுரருடல் தலைசிதற
தகனமெழ முடுகவிடு வடிவேலா
தரளமணி வடமிலகு திறவர்திரு மகள்கணவ
சகலகலை யெழுததவ பெருமாளே.

திருவாரூர்.

70. தனன தனதன தனதன தன
தனன தனதன தனன தன
தனன தனதன தனன தனதன—தனதான.

கரமு முளரியின் மலர்முக மதிகுழல்
கனம தெனுமொழி கனிகதி ரிளநகை
கலக மிடுவிழி கடலென விடமென மதுதாடே
கருதி யனநடை கொடியிடை யியல்மயில்
கமழு மகிலுட னிளகிய ம்ருகமத
களப புளகித கிரியினு மயல்கொடு திரிவேனை
இரவுபகலக பவமற வினையற
வவிலுமயல்தர விழியினில் விழிவற
விசைய முழுகிய வொருகள பதமுற மடலூடே
யெழுத வரியவள் குககமக ளிருதன
கிருபில் விழுதின மிளையவ னெனுமுரை
யினிமைபெறுவது மிருபதமடைவது மொருநாளே

சுரபி மகவினை யெழுபொருள் வினவிட
மனுவி னெறிமணி யசைவுற விசைமிகு
துயரில் செவியினி லடிபட வினவுபி னதிதீது

துணிவி லிதுபிழை பெரிதன வருமனு
வருகி யாகர சிவசிவ வெனுமதொர்
சுருதி யவம்வர விழுபுனல் பெருகிட நடுவாகப்

பரணி யதனது துயர்கொடு நடவிய
பழுதின் மதலையை யுடலிரு பிளவொடு
படிய விரதமு னடவிட மொழிபவ னருளாரூர்

மதியி லறுமுக சிவசுக கணபதி
குமர குருபர நிருபதி சரவண
பரவைமுறையிட மயில்கொடுநடவிய பெருமாளே.

பழநிமலை.

71\. தனத்தனனத் தனத்தனனத்
தனத்தனனத் தனத்தனனத்
தனத்தனனத் தனத்தனனத் தனதான.

குழித்தமணிப் பணித்துகிலைத்
திருத்தியுடுத் திருட்குழலைக்
குலைத்துமுடித் திலைச்சுருளைப் பிளவோடே

குதட்டியிதழ்க் கடித்துதவிக்
கயற்கடையிட் டழைத்துமருட்
கொடுத்துணர்வைக் கொடுத்துநகக் குறிமேலே

பொறித்ததனத் தணைத்துமனச்
செருக்கினர்கைப் பொருட்கவரத்
தணர்ச்சிதனைப் பிணிப்படுவித் திடுமாதர்

புலத்தலையிற் செலுத்துமனப்
ப்ரமத்தையறப் ப்ரசித்தமுகப்
பிரித்தருளித் திருக்கழலைத் தருவாயே

பறித்ததலைத் திருட்டமணக்
குருக்களசட் டுருக்களுடைப்
புழுக்களுகக் கழுக்கள்புகத் திருநீறு

பரப்புமனத் திருப்பதிகக்
கனற்புனலிற் கனத்தசொலைப்
படத்தெழுதித் திரட்டுபுகழ்க் கவிராச

செறித்திருள்சிக் கதிற் றுயிலிற்
றகப்பனெனத் தகப்பனெனைச்
சிறக்கவுரைத் தருட்கருணைப் பெருவாழ்வே

திசைக்கருணைப் பதிக்குளெனைத்
தடித்தடிமைப் படுத்தியருட்
டிருப்பழநிப் பதிக்குமரப் பெருமாளே.

திருப்பிரமபுரம்.

72. தனதனதந்தன தந்தன தந்தன
தனதனதந்தன தந்தன தந்தன
தனதனதந்தன தந்தனதந்தன — தனதான.

தருவின்கிழ்ந் தும ருண்டுவெருண்டுறு
சமயமுமென்றலை யென்றுவரும்படி
தலைவருநின்றுக லங்கிவிரும்பிய தமிழ்கூறுஞ்
சலிகையுநன்றியும் வென்றியமங்குள
பெருமைகளுங்கன முங்குணமும்பயில்
சரவணமும்பொறை யும்புகழுந்திகழ் தனிவேலும்
விருதுதுலங்குசி கண்டியுமண்டரு
முருகிவணங்கித ரும்பதமும்பல
விதரணமுந்திற முந்தரமுந்தினை புனமானும்
மருகமதகுந்தட கொங்கையுநொந்தடி
வருடிமணந்துபு ணர்ந்துதவும்பல
விசயமுமன்பி லொழிந்துமொழிந்தியல்புகல்வேனோ
கருதியிலங்கைய ழிந்துவிடும்படி
யவுணர்டங்கம றிந்துவிழும்படி
கதிரவனிந்துவி ளங்கிவரும்படி விடுமாயன்
கடகரியஞ்சிந டுங்கிமுறிந்திட
மடுவினுல்வந்துத வும்புயமந்தரன்
கூருணைமுகுந்தன் ரங்கன்வருஞ்சக டறமோதி

மருதுகுலுங்கம லங்கழுனிந்திடு
வரதனலங்கல்பு னைந்தருளுங்குறள்
வடிவனெடுங்கடல் மங்கவொரம்புகை தொடுமீளி
மருப்புரந்தர னுந்தமமொன்றிய
பிரமபுரந்தனி லுங்குகனென்பவர்
மனமதிலும்பரி வொன்றியமர்ந்தருள் பெருமாளே

---

73. தனதனதனதன தந்ததானன
தனதனதனதன தந்ததானன
தனதனதனதன தந்ததானன—தனதான.

கனைகடல்வயிறுகு ழம்பிவாய்விட
வடதமணியகிரி கம்பமாய்நட
கணபணவிகடித தொந்தகாளப யங்கராசன்
கயிறெனவமரா னந்தகோடியு
முறைமுறையமுதுக டைந்தநாளொரு
கதறியிவுலகைவி ழுங்குமேகவொ ழுங்குபோல
வினைமதகரிகளு மொண்டிசாமுக
கிரிகளும்வெருவிட வண்டகோளகை
வெடிபடவெவரையும் விஞ்சிமேலிடு நஞ்சுபோல
விடுகுழையளவும ளந்தகாமுக
யுவர்பலிகவர்வுறு பஞ்சபாதக
ருவிழிலைமகளிரோ டன்புகூர்வதொ ழிந்திடாதோ

முனைபெறவலய மணிந்தமோகர
நிசிசரர்கடகமு றிந்துதூளெழ
முகிலினம்வெருவவி ருண்டதாரா ணஞ்சமீன
முழுகியதிமிரத ரங்கசாகர
முறையுடனிமையவர் தங்களூர்புக
முதுகிரியுருவமு னிந்தசேவக செப்பொன்மேரு
அனையகனகவிப வங்கொள்கோபுர
வருணையிலுறையு மருந்துணாமுலை
யபிரவவனிதைத ருங்குமாரவி ல்க்குமார்பா
வடவியில்வடிவுக ரந்துபோயொரு
குறமகள் பிறகுதி ரிந்தகாமுக
வரிகரபிரமபு ரந்தராதிபர் தம்பிரானே.

பொது.

74. தையதனதானத் — தனதான.

துள்ளுமதவேள்கைக் கணையாலே
தொல்லைநெடுநீலக் கடலாலே
மெள்ளவருசோலைக் குயிலாலே
மெய்யுருகுமானைத் தழுவாயே
தெள்ளுதமிழ்பாடத் தெளிவோனே
செய்யகுமரேசத் திறலோனே
வள்ளல்தொழுஞானக் கழலோனே
வள்ளிமணவாளப் பெருமானே.

நிம்பபுரம்.

75. தந்ததனதான தந்ததனதான
தந்ததனதான தந்ததனதான — தனதான

அஞ்சுவிதபூத முங்கரணநாலு
மந்திபகலியாது மறியாத
வந்திரடவாதி யொன்றுமலதான
வந்தவொருவீடு பெருமாறு
தஞ்சுதவழ்சார லஞ்சயிலவேடர்
மங்கைதனைநாடி வனமீது
வந்தசரணார விந்தமதுபாட
வண்டமிழ்விநோத வருள்வாயே
குஞ்சரகலாப வஞ்சியபிராமி
குங்குமபடீர வதிரேக
கும்பதடமீசென் றணையுமாறு
குன்றுதடுமாற விகல்கோப
வெஞ்சமரசூர னெஞ்சுபகைதீர
வென்றிவடிவேலை விடுவோனே
விம்பமதில்சூழ நிம்பபுரவாண
விண்டலமகீபர் பெருமாளே.

76. தனன தனத்தத் தனந்தனந்தன
தனன தனத்தத் தனந்தனந்தன
தனன தனத்தத் தனந்தன — தந்ததான.

முலைமிலுக்கிப் பெருங்கருங்குழல்
முகிலையிகழ்த்துச் செருந்திசண்பக
முகையைமறைத்துப் புறம்புவந்தடி முன்பினுக
முலையையசைத்துத் திரிந்துமுன்றரி
கலையைநெகிழ்த்துப் பிணைந்துவஞ்சக [டே
முறுவல்விளைத்துத் துணிந்துதங்கொரு முன்றிலூ
மகளிர்விருப்பிற் சிறந்தபந்தியின்
மதனனுயிர்க்கக் கொழுந்துவெண்பிறை
வடவையெரிக்கத் திரண்டுபண்தனை வண்டுபாட
மலயநிலத்துக் கரந்தலதன்றனு
நிலைகுலையத்தொட் டெடம்புபுண்செய்து
மயலையளிக்கக் குழைந்துசிந்தைதம லங்கலாமோ
பகலவன்மகட்குப் புகுந்துகந்தர
ககனமுகட்டைப் பிளந்துமந்தர
பருவரையொக்கச் சுழன்றுபின்புப றந்துபோக
பண்மணிபட்சத் துரங்கமுன்றனி
முடுகிநடத்தக் கழிந்துவிந்தெழு
பரவையரற்றப் பஞ்சநின்றய யந்துபாட

குகனென்னமுக்கட் சயம்புவும்ப்ரிய
மிகவசுரர்க்குக் குரம்பைவந்திட
விகலமர்குத்திப் பொருங்கொடும்படை வென்றவே [ளே

குழையணியொப்பொற் றிவந்தசங்கரி
கவுரியெடுத்துப் பரிந்துகொங்கையி
லமுதையளிக்கத் தெளிந்துகொண்டருள் தம்பிரா [னே

திருவருணை.

77. தனதனத் தானத் தானனதத் தானனத்
தனதனத் தானனத்—தனதான.

கயல்விழித் தேனெனைச் செயலொழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் பெறுமாது
கருதுபுத் ராவெனப் புதல்வரப் பாவெனக்
கதறிடப் பாடையிற் றலைமீதே
பயில்குலத் தாரழப் பறைபநட் பாரழப்
பறைகள்கொட் டாடவச் சமனுகும்
பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
பரிகரித் தாடையைத் தரவேணும்
அயலிடைச் சேவல்கைப் பரிதரத் தோகையுற்
றஞ்சலையிற் கோபுரத் துறைவோனே
யமரரத் தாசிறுக் குமரிநட் பாகனத்
தரியசொற் பாவலர்க் கெளியோனே

புயலினைப் பாறுபொற் சயிலமெய்ச் சாரலிற்
புனமலப் பாவையைப் புணர்வோனே
பொடிபடப் பூதரத் தொடுகடற் சூரனைப்
பொருமுழுச் சேவகப் பெருமாளே.

---

78. தானதன தானத்த தானன தானத்த
தானதன தானத்த—தனதான.

ஆலுமயில் போலொத்த தோகையர்க ளேமெத்த
வாரவட மேலிட்ட முலைமீதே
யானதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்கு
மாமைநடை யாரிக்கு வொழியார்பால்
மாலொடவர் போகத்தி லேகுலவி யேநித்தம்
வாடுமெனை நீசித்த மகிழ்வாயே
மாகமுக டாருக்ர வேகமயி லேயுற்று
வாழ்வுபெற வேமுத்தி தருவாயே
நாலுமுகவே தற்கு மாலிலையின் மாயற்கு
நாடவரி யார்பெற்ற வொருபாலா
நாகமுடி மீதுற்ற ஞாலவதி லேபத்தர்
ஞானமுனி வோர்கட்கு மிறையோனே
வேலைவிழி வேடிச்சி யோடமரர் மாதொக்க
வீரருணை மால்வெற்பி லுறைவோனே

வீரமுடனேயுற்ற சூரர்கிளை வீழ்வித்த
வேலைமிக வேவிட்ட பெருமாளே.

---

79. தானதனதானத் தானதனதானத்
தானதனதானத்—தந்ததானா.

ஆலவிழிநீலத் தாலதரபானத்
தாலளகபாரக் கொண்டலாலே
யாரநகையால்விற போலுநுதலால்வித்
தாரநடையால்வற் கொங்கையாலே
சாலமயலாகிக் காலதிரிசூலத்
தாலிறுகுபாசத் தும்பிணாலே
தாழ்விலுயிர் பாழ்ப்பட் டேழ்வினைவிடாமற்
சாகுமுனினேவற் கொண்டிடாதே
சோலைதருகானிற் கோலமறமானைத்
தோளிலுறவாகக் கொண்டவாழ்வே
சோதிமுருகாநித் தாபழயஞாலச்
சோணகிரி வீதிக் கந்தவேளே
பாலககலாபக் கோமளமயூரப்
பாகவுமைபாகத் தன்குமாரா
பாதமலர்மீதிற் போதமலர்தூவிப்
பாடுமவர்தாழ்நற் றம்பிரானே

பொது.

80. தானந் தனதன தானந் தனதன
தானந் தனதன—தனதான.

தீயும்பவனமு நீருந்தரணியும்
வானுஞ்செறிதரு பசுபாசத்
தேகந்தனைநிலை யேயென்றிருவினை
தீருந்திறவினை யறியாதே
ஓயும்படியறு நூறும்பதுமுதல்
நூறும்பதினிரு பதினாறு
மோடுஞ்சிறுவுயிர் மீளும்படிபுகல்
யோகம்புரிவது கிடையாதே
லேயுங்கணியும் விளாவும்படிபுன
மேவுஞ்சிறுமிதன் மணவாளா
மீனப்படுகட லேழுந்தழலெழ
வேதங்கதறிட வொருநாளும்
வாயுங்குலகிரி மாவுந்தொளைபட
மாகந்தரமதில் மறைசூரன்
மார்புந்துணையுறு தோளுந்துணிபட
வாள்கொண்டமர்செய்த பெருமாளே.

---

81. தனன தாத்தன தனன தாத்தன
தனன தாத்தன—தந்தான.

பொதுவதாய்த்தனி முதலதாய்ப்பக
லிரவதாய்ப்புகல் கின்றவேதப்

பொருளதாய்ப்பொருண் முடிவதாய்ப்பொரு
ளெளியதாய்ப்புகை யின்றிஞான
கதியதாய்க்கரு தரியதாய்ப்பரு
கமுதமாய்ப்புல னைந்துமாயக்
கரணமாய்த்தெனை மரணமாற்றிய
கருணைவார்த்தையை யென்றுசேர்வேன்
உததிதீப்பட நிருதரம்பெழ
வுலகுபோற்றிட வெங்கலாப
வொருபராக்ரம துரகமோட்டிய
வுரகர்போற்றிய நண்பவானோர்
முதல்வபார்பதி புதல்வகாத்திகை
முலைகள்தேக்கிட வுண்டவாழ்வே
முளரிபாற்கடல் சயிலமேற்பயில்
முதியமூர்த்திகள் தம்பிரானே.

82. தானத்தத் தந்தனந் தனத்தத் தந்தனந்
தனத்தத் தந்தனந்—தன தான.

தடக்கைப் பங்கயக் கொடைக்குக் கொண்டறன்
டமிழ்க்குத் தஞ்சமென் றுலகோரைத்
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்த்திப் பப்பரந் தனையூசற்
கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சவுந் தரியவாழ்வை

கனத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்
　　கழற்குத் தொண்டுகொண் டருள்வாயே
படைக்கப் பங்கயன் றுடைக்கச் சங்கரன்
　　புரக்கக் கஞ்சமன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
　　பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா
குடக்குத் தெண்பரம் பொருப்பிற் றங்குநங்
　　குலத்திற் கங்கைதன் சிறியோனே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
　　குவித்துக் கும்பிடும் பெருமாளே.

திருவேரகம்.

83. தனனதன தானதந்த தனனதன தானதந்த
　　தனனதன தானதந்த தானதந்த-தனதான.

முழுகிவட வாமுகத்தி லெழுகனலி லேபிறக்கு
　　முழுமதிநி லாவினிற்கும் வசையாலும்
மொழியுமட மாதருக்கு ளினியதனி வேயிசைக்கு
　　முதியமத ராசனுக்கு மழியாதே
புழுகுதிகழ் நீபமத்தி லழகியரு ராநிரைத்த
　　புதுமையினி லாதிரட்டி புயமீதே
புளருடம்வகை தானிரைத்த குணரும்வகை நீலவித்த
　　பொருமயிலி லேறிநித்தம் வரவேணும்

எழுமகர வாரிசற்று பொழிலருணை மாநகர்க்கு
னெழுகரிய கோபுரத்தி லுறைவோனே
இடைதுவள வேடுவச்சி புவளவித மேழுதுடிப்ப
விளமுலைவி டாதசித்ர மணிமார்பா
செழுமதிய நாகமொய்த்த வொழுகுபுனல் வேணி
வைத்த, சிவனைமுத லோதுவித்த குருநாதா
திசைமுகன்மு ராரிமற்று மரியபல தேவருற்ற
சிறையடைய மீளவிட்ட பெருமாளே.

விராலிமலை.

84. தானதத் தனதான தானதத் தனதான
தானதத் தனதான—தனதான

நீள்புயற் குழன்மாதர் பேரினிற் கிருபையாகி
நேசமுற் றடியேனு நெறிகேடாய்
நேமியிற் பொருடேடி யோடிமெய்த்துளம்வாடி
நீதியிற் சிவவாழ்வை நினையாதே
பாழினுக் கிரையாம னும்மைவைத் தொருகோடி
பாடலுற் றிடவேசெய் திடுமோச
பாவியெப் படிவாழ்க தேவர்கட் குளதான
பார்வைசற் றருள்வேறு பணியாயோ
ஆழியிற் றுயில்வோனு மாமலர்ப் பிரம்மாவு
மாகமப் பொருளோரு மனைவோரு

மாணமத் தகவோனு ஞானமுற் றியல்வோரு
மாயிரத் திருநூறு மறையோரும்
ஆறுமெய்த் தவர்சூழ்வி ராலிவெற் பினின்மேவு
வாகுசித் திரதோகை மயிலேறி
மாறெனப் பொருசூர னீறெழப் பெரும்வேல
மான்மகட் குளஞன பெருமாளே

திருவேரகம்.

85. தனனதன தன்னதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

சரணகம லாலயத்தை யரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க வறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமையன்மிடி யான்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தென்குறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகவுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாகுமிக்க கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா.

அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
வரியதமிழ் தானளித்த மயில்வீரா
வதிசய மநேசமுற்ற பழநிமலை மீதுதித்த
வழகுதிரு வேரகத்தின் முருகோனே.

கதிர்காமம்.

86. தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா—தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்று ணிறாகூறாய்ச்
சிரத்தோ டுறுத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பெலத்தார் விருதாகச்
சிறைச்சேவல் பெற்றாய் மிதித்தாய்
திருத்தா மரைத்தா ளருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வரும்போது
பொழுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
பொரித்தார் நுதர்பார் வையிலேயின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் குரித்தார்
கருத்தார் மருத்தார் மகனைரைக

சிக்கோல மிட்டார் கணுக்கா ணமுத்தே
கதிர்க்காம முற்றூர் முருகோனே.

திருப்புலியூர்.

௬௭. தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தத்தத் தத்தன தத்தத் தத்தன
தத்தத் தத்தன தத்தத் தத்தன-தனதான.

மருவு கடன்முகி லனைய குழன்மதி
வதன நுதல்சிலை மனைய தெனும்விழி
மச்சப் பொற்சனை முக்குப் பொற்குமி
ழொப்பக் கத்திரி யொத்திட் டச்செவி
குமுத மலரித ழமுத மொழிநிறை
தரள மெனுநகை மிடறு கமுகெனு
வைத்துப் பொற்புய பச்சைத் தட்டைபொ
டொப்பிட் டுக்கம லக்கைப் பொற்றுகி
ரனைய விரலொடு கிளிகள் முகாக
மெனவு மிகவிய குவடு மிணையுறு
செப்புத் தச்சம ருப்புச் சக்கரம்
வைத்துப் பொற்குட மொத்திட் டுத்திகழ்
முலைமேவும்
வடமு நிரை தரள பவளமொ
டசைய பழமர விலவ யிறுமவி

ரற்புத் திக்கிணை பொற்புத் தொப்புளு
மப்புக் குட்கழி யொத்துப் பொற்கொடி

துடிமி னளவிடு மிடையு மினமெ தென
வரிய கடிதட வமுது கழைரச

மட்டிப் பொக்கம லத்திற் சக்கிரி
துத்திப் பைக்கொரு முத்துப்பட்டுடை

யழகு தொடையிணை கதலி யாமென
மொழியு முழவெரடு சமட நிகர்குதி

கட்டம் புத்தக மொத்துப் பொற்சா
ணத்திற் பிற்புற மெத்தத் தத்தைகள்

மயில்போல்

தெருவில் முலைவிலை யுரைசெய் தவரவர்
மயல்கொ டணைவரமருள்செய் தொழில்கொடு

தெட்டிப் பொற்பல சொக்கிட்டுப் பொருள்
பற்றிக் கட்டில ணைக்கொப் பிப்புணர்

திலக மருபட விழிகள் சுழலிட
மலர்க ளிணைகுழ லிடைகொள் துயில்பட

திக்தித் துப்பிதழ் வைத்துக் கைக்கொடு
கட்டிக் குத்துகு லைக்குட் கைப்பட

திரையி லமுதென கழையி ரசமென
பலவில் சுளையென வுருக பிணிபல

சிக்கிப் பட்டுடல் கெட்டுச் சித்தமும்
வெட்கித் தூக்கமு மொத்துக் கொக்கென
கரைமேவி
செவியோ டொளிர்விழி மறைய மலசல
மொழிகள் பலவுரை குழற தடிகொடு
தெத்திப் பித்தமு முற்றித் தற்செய
லற்றுச் சிக்கியெ னத்துக் கப்பட
சிலர்கள் முதுவுடல் விளவு பொழுதினி
லிவரி றுறமுடை நமனு முயிர்கொள
செப்பற் றும்புண பொப்பித் துப்பென
ரிட்டுப்பொற்பறை கொட்டச் செப்பிய
சென்ன மிதுவென வழுது முகமிசை
யலறி யணையவ ரெடென சுடலையில்
சிற்றித் திக்கிரை யிட்டிட்டிப்படி
நித்தக் துக்கமெ டுத்திட்டெச்சட
முழல்வேனை
குருவி னுருவென வருள்செய் துறையினில்
குதிரை கௌவரு நிறைத வசிதலை
கொற்றம் பொற்பதப் வைத்திட்டற்புத
வெற்றிப் பொற்பொரு விட்டுக் கைக்கொளு
முதல்வ னிளகலை மதியி மடைசடை
யருணை வரசுல மழுவு முழையணி

கொட்டத் துப்புரர் கெட்டுப் பொட்டெழ
விட்டத் திக்கனை நக்கற் கற்புக

குமர னெனவிரு தொனியு முரசொடு
வீணையுமெழுகட லதிர்வின் முழவொடு

துட்டத் தக்கரை வெட்டத் தட்டக
கொப்பத் திக்குமெ டுதறுத் தத்திட

லமர்மேவி

குருகு கொடிசிலை குடைகள் மிசைபட
மலைகள் பொடிபட வுடுகளுதிரிட

கொத்துச் சக்கிரி பற்றுப் பொற்கரி
யெட்டுத் திக்குமெ டுத்திட்டுக்குல

குமர குருபர குமர குருபர
குமரகுருபர வெனவொ தமரர்கள்

கொட்டப் புட்பமி றைத்துப் பொற்சர
ணத்திற் கைச்சிரம் வைத்துப் பொற்கர

குலவ நரிசிறை கழுகு கொடிபல
கருட னடருட குருதி பருகிட

கொத்தப் பத்திர மிட்டுப் பொற்சுக
னத்தைற் சித்தட ரட்சித்துக்கொளு

மயில்வீரா

சிரமொ டிரணிய னுடல்கிழியவொரு
பொழுதி னுகிர்கொடு வரிய நட்மிடு

சித்தப் பப்புகம் ளைத்துச் சக்கர
வைத்துக் குதகினை யிட்டுச் சக்கிர

னரிய விழிகெட வொருப துவழுவ
மழிய நெடியவர் திருவு மறுகியர்

செற்றுத் திக்கில நக்கந் துச்சிய
முற்றுப் பொற்றவர் தற்றுப் புக்கிர

செயமுறு மனைவி கிலைகை கொடுகர
மிருப துடைகிரி சிரமொர் பதுவிழ

திக்கெட் டைக்கக னத்தர்க் குக்கொடி
யர்க்கைப் பொற்புய தக்குச் சித்திர

மருகோனே

திலக மதிமுக வழகி மரகத
வடிவி பரிபுர நடன மலர்பத

சித்தர் குக்குறி லைத்திட் டித்தனை
முத்தப் பொற்கிரி பொக்குச் சித்திர

சிவைகொள் திருமர கதவி யெருவிக
மொருபெருதவ கிழவி யபல்கொடு

சொட்டுக் கிச்சுக முத்துக் கத்துப
சித்திற் சிற்புகப் வைத்துத் திக்கற்புற

திசையி லயுதென மொழிகெய் கவுரிய
ளரிய மகனென புகழ் புலேசகரில்

செட்டிப் பொற்றன முற்றப் பொற்கு...
தெத்தைக் குப்புள கித்துட் டொப்பி...
பெருமாளே.

பொது.

88. தக்தன தானன தத்தன தானன
தத்தன தானன—தனதான.

சுட்டது போலாசை விட்டுல காசார
துக்கமி லாஞான சுகமேவி
சொற்கரு ணாதீத நற்குண மூடாடு
சுத்தநி ராதார வெளிமீதா
மொட்டலர் வாரீச சக்ரச டாதார
முட்டவு மீதேறி மதிமீதாய்
முப்பது மாறாறு முப்பதும் வேறான
முத்திரை யாமோன மடைவேனோ
எட்டவொ ணாவேத னத்தினி கோகோவெ
னப்பெரு மான்மேவி வலைசாய
வெற்றிய வேழாழி வற்றிட மாறாத
வெக்கநீ யோகோடி யசுரேசர்
பட்டொரு சூர்மாள விக்ரம வேலேவு
பத்திரு தோள்வீர திணைகாவல்
பத்தினி தோடோயு முத்தம மாறாத
பத்திசெல் வானடர் பெருமாளே

திருக்குறட்டி.

89. தானதன தத்ததான தானதன தத்ததான
தானதன தத்ததான—தனதான.

கிரிமி குட்டமீளை வாதமொடு பித்தமூல
நீர்க்குளிர்வெ துப்புவேறு முளநோய்கள்
சேருறுப்பு ழுக்கள்கூடு நான்புகமொ டுத்தவிடு
கீடுபலி ரத்த மீளை தசைதோல்சீ
பாரியர வத்துவார நாறுமும லத்திலாறு
பாய்ப்பிணியி யற்றுபாவை நரிநாய்பேய்
பாறெருகெ ழுக்கள்கூகை காமிவைபு சிப்பதான
பாழுடலெ டுத்துவீணி லுழல்வேனோ
நாரணிய றத்திகாரி யாறுசம யத்திபூத
நாயகரி டத்திகாமி மகமாயி
நாடக நடத்தகோல நீலவரு ணத்திவேதந
நாயகியு மைச்சிநீலி திரிசூலி
வாரணிமு லைச்சிமூரான பூரணிக லைச்சுகரக
வாணுத லளித்தவீர மயிலோனே
மாடமதில் முத்துமேடை கோபுர மணைத்தசோலை
வாருளகு றட்டிமேவு பெருமாளே

பொது.

90. தனதன தானத்தானன தனதன தானத்தானன
தனதன தானத்தானன — தனதான.

முருகம யூரச்சேவக
குறமக ளாவற்பூதர
முகுளய வுரக்கோமள முலைமீதே

முழுகிய காதற்காமுக
பசுபதி பாசத்தாய்வினை
முதியபு ராரிக்கோதிய குருவேயென்

றழுகியு மாடிப்பாடியு
மிருகழ லடிச்சூடியு
முணர்விலொ ராடிக்கூடியும் வழிபாடுற்

றுலகிலொ ராசைப்பாடற
நிலைபெறு ஞாலத்தாலினி
யுனதடி யாரைச்சேர்வது மொருநாளே

மருகனெ டுமற்சூழ்கொலை
கருதியமாமப் பாதகன்
வரவிடு மாயப்பேய்முலை மருகாமுன்

வருகரி யானைக்கோடவை
திருகிவி ளாவிக்காய்கனி
மதுரையில் வீழச்சாடிய விதமார்புட்

பொருதிரள் சோரப்பாரிய
மருதிடை போயப்போதொரு
சகடுதை யாமற்போற்செய்து விளையாடி
பொதுவியர் சேரிக்கேவளர்
புயல்மரு காவசராயுத
புவஒி பாபுத்ரேனிர்கள் பெருமானே.

திருவாலங்காடு.

தனதன தானந்தாத்த தனதன தானந்தாத்த
தனதன தானந்தாத்த—தனதான.

வடிவது நீலங்காட்டி
முடிவது காலங்காட்டி
வரவிடு தூதன்கோட்டி விடுவாச
மகனொடு மாமன்பாட்டி
முதலுற வோருங்கேட்டு
ழிதர மாயந்தீட்டி யுயிர்போலே
படிமிசை நாளுங்காட்டி
யுடலுறு நோய்பண்டேற்று
பழவினை பாவந்தீர்த்து னடியேனைப்
பரிவொடு நாளும்பார்த்து
விரிதமி ழகளுங்கூத்தர்
பார்புகழ் பாருன்றுட்கொண் டருள்வாயே

முடிமிசை சோமன்சுட்டி
வடிவுள வாலங்காட்டி
முதிர்நட மாடுங்கூத்தர் புதல்வோனே
முருகலர் தாமஞ்சூட்டி
யொருதனி வேழங்காக்க
வருதிரு மாலுந்தோற்க வகைகூறி
இடியென மேகங்கூட்டி
நெடிதரு சூலந்தீட்டி
யெதிர்பொரு சூரன்றாக்க வரலோடு
மிலகிய வேல்கொண்டேற்ற
வுடலுரு கூறன்றாக்கி
யிமையவ ரேதந்தீர்த்த பெருமாளே.

பழநிமலை.

92. தனன தனன தனன தனன
தனன தனன—தனதான.

மருமணைபு மரகமினிய
தனமு நிலையு மிவைபோகத்
தறுகண் மறலி முறுகுகயிறு
தலையை வளைய லெறியாதே
கமலவமல கடனவுபய
கனக மணிகொ ணிருபாதங்

தருக வருளி யெனது தனிமை
கழியவறிவு தரவேணும்
குமரசமர புரியின்முருக
குலவுபழநி மலையோனே
கொடியகிரியை முடியமுடிகு
குறவர்சிறுமி மணவாளா
வமரரிடரு மவுணருடலு
மழியவமர்செய் தருள்வோனே
றமுமிறமு மயிலுமயிலு
மழகுமுடைய பெருமாளே.

திருக்குராவடி.

93. தனத்த தானன தனதன—தனதான.

மருக்கு லாவிய மலரணை கொதியாதே
வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே
கருக்கு லாவிய வயலவர் பழியாதே
கடப்ப மாலையை யினிவர விடவேணும்
தருக் குலாவிய கொடியிடை மணவாளா
சமர்த்த னேமணி மரகத மயில்வீரா
திருக்கு ராவடி நிழறணி லுறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே.

பொது.

94. தனதன தந்ததத்த தனதன தந்ததத்த
தனதன தந்ததத்த—தனதான.

மொழியநி றங்கறுத்து மகரவி னங்கலக்கி
முடியவ ளந்திரைத்த கடலாலே
முதிரவி டம்பரப்பி வடவைமு கந்தழற்கு
முழுகியெ ழுந்திருக்கு நிலவாலே
மழையள கந்தரித்த கொடியிடை வஞ்சியுற்ற
மயலில்மனந்திளைத்து விடலாமோ
மரகத துங்கவெற்பில் விகடந டங்கொள்சித்ர
மயிலினு வந்துநித்தம் தரவேணும்
அழநியெ னுங்குறத்தி புழுகியல் சந்தனத்தி
யமுதத னம்புதைத்த திருமார்பா
வருணைவ ளம்பதிக்கு மழகிய செந்திலுக்கு
மமரர்த லங்களுக்கு மிறையோனே
வருணைவ ளம்பதிக்கு மழகிய செந்திலுக்கு
மமரர்த லங்களுக்கு மிறையோனே
எழுபுவ னம்பிழைக்க வசுரர்சு ரந்தறித்த
வெழுசயி லந்தொளைத்த கதிர்வேலா
விரளியொ டந்தரத்த ரரகரி பங்கயத்த
ரிவர்கள்ப யந்தவிர்த்த பெருமாளே.

திருவருணை.

95. தனன தனன தனன தனதன
தனன தனதன—தனதான.

இருகு மணிமுலை மருவு தாளமு
மெரியு மெழுமதி நிலவாலே
பிரிவி லெனதுயி ரவர வருகுயி
லிசையு மு [illegible] லலையாலே
தருக ணாதிபதி மதனன் விடுகொடு
சரமு மினியெனை யுறுகாதே
தருண மணிபொழி லருணை நகருறை
சயில மிசையினில் வரவேணும்
மூருத் திரிபுர மறுகு கனலெழ
முறுவ லுடையவர் குருநாதா
மூடிய கொடுமுடி யசுரர் பொடிபட
முடுகு மரகத மயில்வீரா
குறையர் மடமக ளமிர்த கனதன
குவடு படுமொரு திருமார்பா
கொடிய சுடரிலை தனையு மெழுகடல்
குறுக விடவல பெருமாளே.

96. தனனதத்தத் தத்ததத்தத் தனதன
தனனதத்தத் தத்ததத்தத் தனதன
தனனதத்தத் தத்ததத்தத் தனதன-தனதான

கமல மொட்டைக் கட்டழித்துக் குமிழியை
நிலைகுலைத்துப் பொற்குடத்தைத் தமனிய
கலகவர்க்கத் தைத்தகர்த்துத் தலையற விளநீரைக்

கறுவிவட்டைப் பிற்றுரத்திப் பொருதவ
சயம்விளைத்துச் செப்படிப்பித் துலவிய
கரிமருப்பைப்புக்கொடித்துத்திரன்மக னபிஷேகம்

அமலர்நெற்றிக் கட்டழற்குட் பொடிசெய்து
வதிகசக்ரப் புட்பரக்கக் கொடுமையி
னடனமிட்டச் சப்படுத்திச் சபதமொ டிருதாள

மறைதல்கற்பித் துப்பொருப்பைக்குலவிய
சிறகறுப்பித் துக்கதித்துப் புடைபடு
மபிநவச்சித் ரத்தனத்துத் திருடிக ளுறவாமோ

தமரமிக்குற் றுக்கலக்கப் பலபறை
தொகுதொகுத்தொக்குத் தொகுக்கதொகுதொகு
தரிகிடதத்தத் தத்தரிக்கத்தரிகிட வெனமோதி

சடவுடற்பக் கப்பழுத்துப் புகையெழு
விழிகளுநட்செக் கச்சிவத்துக் குறளிகள்
கசைகள்பட்சித் துக்களித்துக்கழுகொடு கழுகாட

அமரில்மெத்தக் கொக்கரித்துப் பொருதிடு
மசுரரத்தத் திற்குளித்துத் திமியென
வடிநடித்திட்டுக்கைகொட்டிச்சமர்செயு மயிலாள

வழகுமிக்குச் சித்திரப்பொற் புரவியி
லுலவுநிர்த்தக் கொற்றசித்துக்குருபர
கருணையிற்சித்தெனக்குத் தெளிவருள் பெருமானே

பொது.

97. தனத்தத் தானத் — தனதான.

கருப்பத்தூறிப் பிறவாதே
கனக்கப்பாடுற் றுழலாதே
திருப்பொற்பாதத் தநுபூதி
சிறக்கப்பாலித் தருள்வாயே
பரப்பற்றுருக் குரியோனே
பரத்தைப்பாருக் கணியோனே
திருக்கைச்சேவற் கொடியோனே
சகத்திற்சோதிப் பெருமானே.

திருவிடைமருதூர்.

98. தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனா தானதானனா
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனா தானதானனா
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனா தானதானனா தனதனதன-தனதான.

அறுகுநுனி யனியனைய சிறியதுளி பெருகியொரு
வாகமாகியோர் பாலரூபமா
யருகுமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
வாயிதாதையார் மாயமோகமா
யருமையினிலருமையிட மொருமொரெனவுடல்வ
ளர, வாருமாருமாய் வாலரூபமா
யவரொரு பெரியோரா

யழகுபெற நடையுடைய சிறிதுபட மொழிபழகி
யாவியாயயோர் தேவிமாருமாய்
விழிசுவறவரிவையர்கள் படுகுழியைநிலைமையென
வீடுவாசலாய் மாடகூடமா
யணுவளவு தவிடுமிகள் பிதிரவிட மனமிருகி
யாசையாளரா யூசிவாசியா
யவிகிற சுடர்போலே

வெறாமிடிய னொறுதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலைவீடுகேள் கீழைவீடுகேள்
திடுதிடென நுழைவதன்முனெதிர்முடுகியவர்க
ளொடு, சீறிஞாளிபோ லேறிவீழ்வதாய்
விரகினொடுவருபொருள்கள் கவரியிடவணுகிவெறு
வீணியார்சொலே மேனதாயிடா
விதிதனை நினையாதே

மிணுமிணுசெனுமுடல மறமுழுகியிறுகிவர
விலைசேவையா மூலூபாவியாய்
மறுமையுமெதனுமவரை விடும்விழலையதனில்வரு
வார்கள்போலெவரு காணுமோவெனு
விடுதுறவுபெரியவரை மறையவரை வெடுவெடென
மேளமேசொலீ ஞாளிவாயனாய்
மிடையுறு வருநாளில்

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாதமூறுக மாலைசோகைநோய்
பெறுவயிறு வலிறுவலி படுவனவர விருவிழிகள்
பீளைசாறிடா வீணையேலிடா
வழவழென வுமிழமது கொழகொழென வொழுகவிழ
வாடிமீளலா நாடிபேதமாய்
மனையவள் மனம்வேறாய்

மனுக்குமனுகொனுமனைவி லனுதினமுமணையுமொரு
மாதர்சீயெனு வாலர்சீயெனு
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடிபகடு
காடுவாவெனு வீடுபோவெனு
வலைதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயுமேலிடா வாவிபோகுநாள்
மனிதர்கள் பலபேசி

இறுதியிதொ டறுதியென வுறவின்முறை கதறியழ
வேழைமாதரார் மோதிமேல்விழா
வெனதுடைமையெனதடிமை யெனுமறிவுசிறிதுமற
வீமுலோவெனு வாயையாவெனு
விடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
வீமதேசமே பேய்கள்சூழ்தரா
வெரிதனி லிடுவ்வாழ்வே

யிணையடிகள் பரவுமுன தடியவர்கள் மிகவுமெனே
யேசிடார்களோ பாசநாசனே
யிருவினையு மலமுமிற விழவியொடு பிறவியற
வேகபோகமாய் நீயுநானுமா
யிறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதி
லோகநாயகா லோகநாயகா
விமையவர் பெருமாளே.

திருக்கரபுரம்.

99. தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத்—தனதான

ஒருவரைத் தனிமனைச் சயனமெத்தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட்
டினிதாக

ஒருவரைத் தமதணைக் கருகுறப் புணரவிட்
டொருவரைப் பரவசப் படவுடற் றழுவலுற்
றுயிர்பிழைப் பதுகடைத் தளவுமுப் பசமெனச்
செயுமாதர்

தருமயற் ப்ரமைதனிற் றவநெறிக் கயலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுகைத்
தனமவத் தினிவிறைத் தெவருமுற் றிகழ்வுரத்
திரிவேனைச்

சகலதுர்க் குணமறச் சகல்சற் குணமுற
தரணியிற் புகழ்பெறக் கருணையுற் றுனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுநினைத் திடவருட்
டருவாயே

குருமொழி தவமுடைப்புலவரைச் சிறையில்வைத்
தறவுமுக் கிரம்விளைத் திடுமரக் கரையுழக்
கொடியதுர்க் குணவவத் தரைமுதற் றரிசறத்
திடும்வேலா

குயில்மொழிக் கயல்விழித் துவரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கன்குழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவிணைப்
புணர்வேனே,

கருதுகட் சமயர்கட் கணியற்க் கவையுடைப்
பறித்தலைச் சமணரைக் குலமுதற் பொடிபடக்
கலகமிட் டடலுயிர்க் கழுவினுச் சியினில்வைத்
திடுவோனே

கமுகினிற் குலைபறக் கதலியிற் கனியுகக
கழையின்முத் தமுதிரக் கயல்குதித் துலவுநற்
கனவெயிற் றிகழ்திருக் கரபுரத் தறுமுகப்
பெருமாளே.

விநாயகமலை.

100\. தனதன தானதானன தனதனதான தானன
தனதன தானன தானன—தனதான.

சரவண சாதாநமோநம கருணையதேவாநமோநம
சமதள பாதா நமோநம வபிராம
கருணசு காயநமோநம நிருபநல் வீராநமோநம
சவளதள வீரா நமோநம சகதீசா
பரமசொ ரூபா நமோநம சுரபதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம வுமைகாளி

பகவதி பாலாநமோநம விகபரமூலாநமோநம
பவுருஷசீலா நமோநம வருடாராய்
இரவியு மாகாசபூமியு மதியமும் வாழ்வாகவானவ
ரெவர்களுமீடேறவேழ்கடன் முறையோவென்
றிடர்பட மாமேருபூதர மடிபட வேதாநிசாசர
ரிகல்கெட மாசேனைமேலயில் விடுவோனே
மரகத வாகாரவாயனு மிரணிய வாகாரவேதனும்
வசுவெனு மாகாரவீசனு மடிபேண
மவிதுறைவாழ்வேவிநாயக மலையுறைவேலாமகாரத
வனசர ராதாரமாகிய பெருமாளே.

திருத்தணிகை.

101. தனன தானதந் தனன தானதந்
தனன தானதந்—தனதான.

பகலிராவெனுங் கருவியான்மனம்
பதறிமால்கள்கொண் டேல்பேணிப்
பழயவேதமும் புதியநூல்களும்
பலபுராணமுஞ் சிலவோதி
யகலநீளமென் றளவுகூறரும்
பொருளிலேயமர்ந் தடைவோரே
யசடர்மூடரென் றவலமேமொழிந்
தறிவிலேனழிந் திடலாமோ

சகலவேதமும் புகலுநாடொறுஞ்
சருகிலாதசெங் கழுநீருந்
தவளநீபமும் புனையுநீபமுந்
தணியில்மேவுசெங் கழுநீருஞ்
சிகரபூதரந் தகரநான்முகன்
சிறுகவாசவன் சிறைமீளத்
திமிரசாகரங் கதரமாமரஞ்
சிதரவேல்விடும் பெருமாளே.

102. தத்ததத்த தத்ததத்த தத்ததத்த தத்ததத்த
தத்ததத்த தத்ததத்த—தனதான.

பொற்பதத்தி னைத்துதித்து
நற்பதத்தி லுற்றபத்தர்
பொற்புரைத்து நெக்குருக்க ளறியாதே
பொத்தகப்பி தற்றைவிட்டு
வித்தகத்து னைத்துதித்த
புத்திபுட்க லக்கமுற்ற நினைவாலே
முற்படத் தலத்துதித்த
விற்படைத்த குற்றமுற்று
முற்பவத்தி லுற்பவித்து முயலாதே
மூட்டவிக்க டைப்பிறப்பி
னுட்கிடப்ப தைத்தவிர்த்து
முத்திசற்றெ னக்களிப்ப தொருநாளே

வெற்பளித்த தற்பரைக்கி
டப்புறத்த னித்தனித்தர்
வித்தகத்த கொற்றமுற்ற மயில்வீரா
வித்தகற்ற முத்தமிழ்ச்சொல்
அத்தசத்தம் வித்தரிக்க
மெய்த்தலைத்திருப்பொருப்பி லுறைவோனே
கற்பகப்பு னக்கொடிச்சி
கச்சடர்த்த சித்திரத்த
கற்புரத்தி ருத்தனத்தி லணைவோனே
கைத்தரக்கர் கொத்தறுத்த
வச்சிரத்த னுக்களித்த
கைத்தொழுத்த றித்துவிட்ட பெருமாளே.

103. தனதனனதந் தனதனனதந்
தனதனனதந்— தனதான.

கனமடவார்தஞ் சிலையதனாலுங்
கனவிலையாலுங் கரைமேலே
கருதியகாயம் பெருகியதோயங்
கருதிலையாலுஞ் சிலையாலுஞ்
கொலைதருகாமன் பலகணையாலுங்
கொடியிடையார்நின் றலையாதே
குரவணிநீடும் பரவணிநீடுங்
குளிர்பதநீதந் தருள்வாயே

சிலைமகனுயன் கலைமகனுயன்
திருமகனுயன் தொழுவேலா
சினவனமானுஞ் சுனவனமானுஞ்
செறிவுடன்மேவுந் திருமார்பா
தலைமலைமீதெதன் புலவருலாவுந்
தணிகையினில்வாழ்செங் கழுநீரே
தனியவர்கூறுந் தனிநெடுமாலுந்
தனிமயிலேறும் பெருமாளே.

---

104. தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன—தனதான.

வெற்றிசெய வுற்றகழை விற்குறிவ னொத்தமதன்
விட்டகணை பட்ட கணையாலே
வெட்டவெளி யிற்றெருவி லட்டவணை யிற்கனல்வி
ழித்தொளிப ரப்பு மதியாலே
பற்றியிசை கற்றகடல் தத்தையர் தமக்குமிசை
பட்டதிகி ரிக்கு மணியாதே
பத்திமையெ னக்கருளி முத்தியைய ளித்துமவர்
பச்சைமயி லுற்று வரவேணும்
நெற்றிவிழி பட்டெரிய நட்டமிடு மத்தர்பர
நித்தர்மன மொத்த கழல்வீரா

நெய்க்காலமொய்க்கு மிசைமெய்க்குயிச் சையுறவிற
நித்தமிறு குற்ற மணிமார்பா
வெற்றிபி திருச்சலதி சுற்றியதி ருத்தணியி
லெப்பொழுது நிற்கு முருகோனே
வெட்டசல மெட்டினிலு மெட்டசுர ரிட்டசிறை
வெட்டிவிடு வித்த பெருமானே.

105. தனத்தன தனத்தன தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன—தனதான.

அருக்கிமெய்த் தனைச்சிரித் தருக்கியிட் டுளக்கருத்
தழித்தறக் கறுத்தகட் பயிலாலே
யழைத்தகப்படுத்திமொட் டலப்பொருட்பறித்தவ
ர்ச், க்டுத்துவத் தமற்றுவித் தகர்போலத்
தருக்குமித்தருக்குமெய்க் கதித்துவப்ர சித்தியைத்
தலத்துமற் றிலைப்பிறர்க் கெனுஞானஞ்
சழுக்துரைத் திமைப்பினிற் சடக்கனற்படிப்பறத்
தடுக்குமிப் பிறப்பினைத் தவிரேனே
பொருப்புடைதிரைக்கடற்பரப்பாக்கர் பட்டபொற்
பொருப்பெனக் குவித்தநிற் பலபேய்கள்
பொசிப்பெனக்குதித்திடப் படைத்தகற்பகப்புரிக்
கிரக்கம்வைத்த பொற்ப்ரபைக் கதிர்வேலா

திருத்தமுத் தமிழ்க்கவிக் கொருத்தமைச் சிறுக்கி
யைத். தினைப்புனக் கிரித்தலத் திடைதோயுந்
திறத்தருக் கிடக்கொடிச் செருக்கவுற் பலச்சுனைச்
சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே

106. தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன—தன தான.

உடலினூடுபோய்மீளு முயிரினூடுமாயாத
உணர்வினூடும் வானூடு முதுநீரு
முலவையூடுதீயூடு புவியினூடும் யாதூடு
மொருவரூடு மோவாத தனியான
சுடரினூடுநால்வேத முடியினூடுமூடாடு
துரியவாகு லாதீத சிவரூபக்
தொடரொணாதமாமாயை துரிசறாததோர்பேதை
தொடுமுபாய மேதேது புகல்வாயே
மடலறாதவாரீச வடவைசாயமாறாத
வரிவிரால்கு தீபாய வமராடி
மதகுசாடிமீதோடி யுழவராய்விடாதோடி
மடையைமோதி யாறூடு தடமாகக்
கடல்புகா மகாமீன முடுகுவாவி தான்மேவு
கமலவாவி போய்மீளு மணிமார்பா
கடவுணீலமாறாத தணியல்காவல்வேல்வீர
கருணைமேரு வேதேவர் பெருமாளே.

107. தானதத்தன தத்தன தத்தன
தானதத்தன தத்தன தத்தன
தானதத்தன தத்தன தத்தன — தனதான.

ஓலையிட்டகு ழைச்சிகள் சித்திர
ரூபமொத்தநி றத்திகள் விற்கணை
யோடிணைத்த விழிச்சிகள் சர்க்கரை யமுதாலே
ஊறியொத்தமொ ழிச்சிகள் புட்குரல்
மேவுவைத்தமெ ருட்டிந டைச்சிகள்
ஓசைபெற்ற துடிக்குளிடைச்சிகள் மணம்வீசும்
மாலையிட்ட கழுத்திகள் முத்தணி
வாரழுத்துத னத்திகள் குத்திர
மால்விளைத்தும னத்தைமருட்டிடு மடமாதர்
மார்பசைத்தும ருட்டியி ருட்டறை
வாவெனப்பொருள் பறற்றிம யக்கிடு
மாதருக்குளவ ருத்தமி ருப்பது தணியாதோ
வேலைவற்றிட நற்கணை தொட்டலை
யீதறுத்தத னிப்படை விட்டற
விறராககர்மு டித்தலைபத்தையும் மலைபோலே
வேரறுத்துநி லத்தி லடித்துறை
வேதலட்சுமி யைச்சிறை விட்டருள்
வீரவச்சுத னுக்குந லற்புத மருகோனே
நீலநற்கனி முக்கணி நிர்க்குணி
வாலவுத்தம பத்தினிநிட்களி
நீண்மலைக்கொடி சத்தியளித்தருள் முருகோனே

நீறதிட்டுநி னைப்பவர் புத்தியை
நேயமெத்தவ ளித்தருள் சற்குரு
நீவஅார்த்ததி ருத்தணிவெற்புறை பெருமாளே.

---

108. தனனதன தனதந்த தனனதன தனதந்த
தானதத்தன தத்தன தத்தன—தனதானு.

முலைபுளக மெழவங்கை மருவுசிறு வளைகொஞ்ச
முகிலளக மகில்பொங்க வழுதான
மொழிபதற வருமந்த விழிகுவிய மதிகொண்ட
முகம்வெயர்வு வரமென்ற லணைமீதே
கலைநெகிழ வளர்வஞ்சி யிடைதுவள வுடலொன்றி
கனவிநய விதயங்கள் குழைவாகக்
கலவிகரை வருமின்ப வலையில்லை படுகின்ற
கவலைகெட நினதன்பு பெறுவேனோ
அலைசெறியு மெழுசண்ட வுத்திவயி றழன்மண்ட
வதிரவெடி படவண்ட மிகுமேலா
ரபயமென நடுநின்ற விமையவருளி யடியுண்ட
வசுரர்பட வுடனின்று பொரும்வேலா
தலையரவ நதிதும்பை யிளநிலவு கமழ்கொன்றை
சடைமுடியி லணிகின்ற பெருமானார்
தருமுருக சுரர்வந்து சரணமலர் தொழுகின்ற
தணிகைமலை யுரைகின்ற பெருமாளே.

---

109. தனத்த தத்தன தனதன தனதன
தனத்த தத்தன தனதன தனதன
தனத்த தத்தன தனதன-தனதானா.

செனித்த தெத்தனை சிறுமண லளவுடல்
பெறித்த தெத்தனை கடலென வுயிர்செய்த
செயித்த தெத்தனை திரைகயலெனபல வதுபோதா

செமித்த தெத்தனை மலைசுனை யுடல்கிடை
செறித்த தெத்தனை சிறுதன்மயல்கொடு [தான்
சடத்திலெத்தனை நமனுயிர்கொடுபோன தளவோ

மனத்தி லெத்தனை யிதுகப டுகள்குடி
கெடுத்த தெத்தனை மிர்கமத மெனபல
தைத்த தெத்தனை யளவிலைவிதிதர மொழியாமல்

வருத்த தெத்தனை மசகளை புலையனை
மடைக்கு லத்தனை மதியழி விரகனை
மலர்ப்ப தத்தினி லுருகவுமிணையடி தருவாயே

தனத்த னத்தன தனதன தனதன
திமித்தி மித்திமி திமிதிமி திமிதிமி
தகுக்கு குக்குகு குகுகுகு குகுகுகு தகுதீதோ

தரித்த ரித்தரி ரிரிரிரி ரிரிரிரி
தடுட்டு டுட்டுடு டுடுடுடு டுடுடுடு
தமித்த மத்தள தமருகவிருதொலி கடல்போலச்

சினத்த மரக்கள செருத்திதி திருகிய
  திழைக்தி டக்கரி யசுரர்கள் பரிசிலை
  தெரிக்கிடக்கழு நரிதினகிணமிசை பொருவேலா
செழிக்க வுக்குமர் சிவசிவ சரணென
  வொழிக்க வற்புத மலர்கொடு பரவிய
  திருக்க ணிப்பதிகுறமகள்மருவிய பெருமாளே.

---

110. தனதனத்தன தனதனத்தன
  தனதனத்தன—தனதான.

மலைமுலைச்சியர் கயல்விழிச்சியர்
  மதிமுகத்தியர் அழகான
மயினடைச்சியர் குயின்மொழிச்சியர்
  மனதுருக்கியர் அணைமீதே
கலைநெகிழ்த்திய னுறவணைத்திடு
  கலவியுற்றவர் பிணிதீரக்
கபடனைக்குண வசடனைப்புக்கயல்
  கதியில்வைப்பது மொருநாளே
குலகிரிக்குல முருவவிட்டமர்
  குலவுசித்திர முனைவேலா
குறவர்பெற்றிடு சிறுமியைப்புணர்
  குமரசற்குண மயில்வீரா
தலமதிற்புகழ் அமரருக்கிடர்
  தனையகற்றிய அருளாளா

தருநிரைத்தெரு மலர்மிகுத்திடு
  தணிமக்குயர் பெருமாளே.

---

111. தனன தானன தனதன தனதன
  தனன தானன தனதன தனதன
  தனதன தானன தனதன தனதன—தனதான

கிரியினேர்வளர் முலைமிசை துகிலிடு
  கபடநாடக முயல்பவ ரசடிகள்
கெடுதியாளர்க ளிடமுடை யுடலினர் விரகாலே
கிளர்தேங்கசை யணையிசை தழுவிகள்
  அமுதுநாறிய லளிதமென் வகனிகள்
கிடையின்மேல்மனமுருகிடுபடிறிகள் பொருளாலே
பரிவிலாமயல் கொடுசமர் புரிபவர்
  அதிகமாயொரு பொருள்தரு பவரொடு
பழபபேரென விதமுற வணைபவர்
பகழிபோல்விடு விழிகவர் திருடிகள்
  தமையெணுவகை யுறுகதி பெறும்வகை
பகரமாமயின் மிசைவர நினைவது மொருநாளே
அரியராதிபர் மலரய னிமையவர்
  நிலைபெறுதிடர் படவிடன் முழுகிய
வசுரர்தாமிற வயில்விடு மறுமுக விளையோனே
அரியகானக முறைகுற மகளது
  கணவனுகிய வறிவுள விதரண
வமரர்நாயக சரவண பவதிற லுடையோனே

தருமநீதியர் சதுர்வித மறையுளர்
தறுவருநிலை பெறுதவ முடையவர்
தளர்விலாமன முடையவ ரறிவினர் பாராசர்
சகலலோகமு முடையவர் நினைபவர்
பரவுதாமரை மலரடி யினிதுறு
தணிகைமாமலை மணிமுடி யழகிய பெருமாளே

112. தனதத்தந்தனதத் தனதத்தந்தனதத்
தனதத்தந்தன தனத்தன—தனதானு.

பொருவிக்கஞ்தொடரச் செருவிக்கந்தொடுமிப்
புனுமைப்புண்டரிகக் கணையாலே
புளகக்கொங்கையிடத் திளகிக்கொங்கையனற்
பெரழியத்தென்றனல்கக் குதலாலே
தெருவிற்பெண்கள்மிசைச் சருவிச்சண்டையிடத்
திரியத்திங்களில்தீப் புனலாலே
செயலிஉறிங்கணையற் பியவற்றஞ்சிடுமித்
தெரிவைக்குன்குரவைத் தரவேணும்
அறவிச்குன்றடையப் பரவிச்செந்தினைவித்
தருமைக்குன்றவருக் கெளியோனே
அசுரர்க்கங்கிலியிட் டமரர்க்கண்டமளித்
தயில்கைக்கொண்டதிறற் குமரேசா

தருவைக்கும்பதியிற் றிருவைச்சென்றணுகித்
தழுவிக்கொண்டபுயத் திருமார்பா
தளரச்சங்குவயற் றிறளத்தங்குதிருத்
தணிகைச்செங்கழனிப் பெருமாளே.

113. தனதத்த தனத் தனதத்த தனத்
தனதந்த தனத்—தனதான.

தகைமைத்தனியிற் பகைகற்றதுகைத்
தனுமுட்டவளைப் பதனாலே
தரளத்திரளிர் பிரளக்கரளத்
தமரத்திமிரக் கடலாலே
யகைமுற்றிகைமுற் றிதெனப் பகல்புக்
கொளிமட்குமியைப் பொழுதாலே
யுமையற்றுணர்வற் றயிரெய்தக்கொடிக்
குனையுற்றனையத் தரவேணுந்
திகைபற்றுமுகக் கமலத்தனைமுற்
சிறையிட்டபதத் திறல்வீரா
திகழ்கற்பகமிட் டவனுக்ககனத்
திருவுக்குருகிக் குழைமார்பா
பகல்கைக்கிரணப் பருணச்சடிலப்
பரமர்க்கொருசொற் பகர்வோனே
பழனப்பொழில்சற் றுதிருத்தணிகைப்
பதியிற்குமரப் பெருமாளே.

114. தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத்—தனதானு.

கிறிமொழிக் கிறுதரைப் பொழிவழிச் சிறிஞரைக்
கெடுபிறப் புறவிழிக் கிறபார்வைக்
கெடுமடைக் குருடரைத் திருடரைச் சமையதர்க்
கெடமைச் செறிதலுற் றறிவேது
மறிதலற் றறைதலற் றயர்தலுற் றருநுதற்
றரவுநெக் கிழிதருக் கடலூலே
யமிழ்தலுற் றமர்தலுற் றமிதலுற் றழிதலுற்
றடியிணைக் கணுகிடப் பெறுவேனோ
பொறியிடைச்செழியனவெப் பொழிதறப்பொறியி
லிப், பொரிதருச் சமணரத் தனைபேரும்
பொடிபடச் சிவமணப் பொடிபரப் பியதிருப்
புகலியிற் கவுணியப் புலவோனே
தறிவளைத் துறநகைப் பொறியெயிப் புரமெரித்
தவர்திருப் புதல்வநற் சுனைமேவுந்
தணிமணிக் குவளைநித் தமலர்த் தருசெருத்
தனிமணிக் குவளைநித் தமலர்த் தருசெருத்
தணிமலைச் சரவணப் பெருமாளே.

115. தனதனத் தனத்தனத் தனத்தனத்தனதனத்
தனதனத் தனத்தனத்—தனதானு.

கனத்தறப்புனைத்தபொற்கழைப்புயத்தனக்கிரிக்
கனத்தையொத்து மொய்த்தமைக் குழலார் தங்

கறுத்தமைக்கயற்கணிற் கறுத்துவைத்தெனுற்றநற்
கடப்பநிற் கடுத்துநிற் கறியாதே
யினிப்பிணக்கணைத்துமெய்த் திருப்பெனத்துருத்தி
கைத், திசைத்தசுக்கிலப்பசுத் தசைதோலா
லெடுத்தபொய்ச்சடத்திணைப்பெஃறுக்குமிப் பிறப்ப
றுத், தெனக்குறித்தமுத்தியைத் தரவேணும்
பணைத்தறச் சினத்திபத் திணைத்துறத் தரக்கனைப்
பயத்தினிற் பயப்படப் பொரும்வேலா
பருப்பதச் செருக்கறுத் துகைக்குமுட் பதத்திணைப்
படைத்தகுக் கிடக்கொடிக் குமரேசா
திணைப்புனபொருப்பதத் தினிற்குமக்குறத்தியைச்
செருக்குறத் திறப்புயத் தணைவோனே
திருப்புறப் புறத்தியிற் றிருக்ககற் றுநித்திலத்
திருத்திசைத் திருத்தணிப் பெருமாளே

---

116. தனதனனதான தனதனனதான
தனதனனதான—தனதான.

உடையவர்களேவ ரெவர்களெனநாடி
யுளநெகிழவாசு கவிபாட
வுமதுபுகழ்மேரு கிரியளவுமான
தெனவரமுமான மொழிபேசி

நடையழகிமீள்வ ரினியவர்கணாளை
கடவுமெனநாடி முகம்வேறாய்
நலமையுளுமேன்மை யருணவொளிவிசும்
நளினவிருபாத மருள்வாயே
விடைகொளவுபாநர் விமலர்திருகுலர்
விகிர்தர்பரயோகர் நிலவூடே
விளவுசிறுபூனை நகுதொலைபொடாறு
விடவரவுசூழு மதியாரச்
சடைபிறவர்காண வுமைமகிழஞான
தளர்நடையிடாமுன் வருவோனே
தடமலருநீல மலர்சுனையனுதி
தணிகைமலைமேவு பெருமாளே.

117. தாந்தன தத்தத னத்தத னத்தன
தாந்தன தத்தத னத்தத னத்தன
தாந்தன தத்தத னத்தத னத்தன-தனதானா.

கூந்தலவிழ்த்துமு டிக்கிமி னுக்கிகள்
பாய்ந்தவிழிக்குழை யிட்டுமிரட்டிகள்
கோன்புபடைததமொழிச்சிபரத்தையர் புயமீதே

கோங்குபடைத்த னத்தைய ழுத்தியர்
வாஞ்சையுறத்தழு விச்சிலுகிட்டவர்
கூன்பிறையொத்தந கக்குறிவைப்பவர் பலநாளும்

ஈந்தபொருட்பெற விச்சையு ரைப்பவர்
ஆந்துணையுற்றழு கைக்குரலிட்டவர்
ஏங்கிசையற்றத லக்குணமட்டையர் பெரருல்திரில்

ஏங்கிபிடைக்கடை யிற்றளிவைப்பவர்
பாங்ககலக்கரு ணைக்கழல்பெற்ற
சந்திலையெப்படி நற்கதி யுற்றிட வருள்வாயே

காந்தண்மலர்த்தொடையிட்டெதிர் விட்டொரு
வேந்துகுரக்கர ணத்தொடு மந்திரள்
காண்டியவச்சத னுத்தம சற்குணன் மருகோனே

காங்குதமிக்கம தக்கொடி வெற்றியில்
வாங்கியமுக்கனி சர்க்கரை முற்றிய
கான்கனிமொக்கும தக்கரி மெச்சிய விளையோனே

தேங்கதறிவித்தென குற்றடி வெற்றிலை
வேங்கைமரத்தொ ழிலைக்கொடு நிற்பவ
தேன்சொலியைப்புணரப்புன முற்றுறைவரவானத்

தீண்டுகழத்திர ளூற்றது துற்றிடு
வேங்கைதனிற்குவ ளைச்சுனை சுற்றலர்
சேர்ந்திருத்தணிகைப்பதிவெற்புறை பெருமாளே.

திருச்செந்தூர்.

118. தனனத னந்தனத்த தனனத னந்தனத்த
தனனத னந்தனத்த—தனதான.

மொழியமு னங்கறுத்து மகரவி னங்களுக்கு
முடியவு ளைந்தரற்று கடலாலே
முதிரவி டம்பரப்பி வடவைமு கந்தெடுத்து
முழங்கியெ ழுந்திருக்கு நிலவாலே
மழையள கந்தரித்த கொடியமத னுசினத்து
மலரளி செங்கைபற்றி யழியாமுன்
மரகத துக்கலெற்றி விகடவு தங்கள்சித்ர
மயிலினில் வந்துமுத்தி தருவாயே
மழகியெ னுங்குறத்தி யுழுநமர் சிந்துரத்தி
யமுதத னம்புணர்த்த திருமார்பா
அழகிய செந்திலுக்கு மதுரைவ ளம்பதிக்கு
மமரர்புரந்தனுக்கு மிறையோனே
எழுபுவனம்பிழைக்க வசுரர்நி ணந்தெறிக்க
விருசயி லத்தொளைத்த கதிர்வேலா
இரவிக ளந்தரத்த ரறியயர் பங்கயத்த
ரிடும்ப யந்தவிர்த்த பெருமாளே.

119. தானத் தானன தானத் தானன
தானத்தானன — தந்ததானு.

சேமக்கோமள பாதத்தாமரை
சேர்தற்கோதும னந்தவேதா
தீதற்றேயவி ரோதத்தேகுண
சீலத்தேமிக வன்புருதே
காமக்ரோதமு லோபத்தேசவி
காரத்தேயழி கின்றமாய
காயத்தேபசு பாசத்தேசிலர்
காழுற்றேயும தென்கொலோதா
நேமிச்சூரொடு மேருத்தூளெழ
நீளக்காளவு யங்கநால
நீலக்ரீபக லாபத்தேர்விடு
நீபச்சேவக செந்தில்வேளே
யோமத்தீவழு வார்கட்கோர்சிவ
லோகத்தேவரு மங்கைபாக
ரோகத்தாருப தேசத்தேசிக
ஆமைத்தேவர்க டம்பிரானே.

120. தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்—தனதான.

அந்தகன் வருந்தினம் புறகிடச்
சந்தத முந்துசென் றரிவையர்க்
கன்புறு மசங்கதந் தவிரமுக் குணமாள

வந்திப கலென்றிரண் டையுமொழித்
திந்திரி யசஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்

செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெ ருகுந்திடத் தெளிதரத் தனிஞான

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர வென்றுநின் றிகனப் படுவேனோ

கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்பயம் பெறவரக் கருமாள

குன்றிடி யவம்பொன் கிணினெனக்
குங்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்துநன் குழைகளிற் ப்ரபைவிசக்

தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலி கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருந்தொறுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

---

121. தனத்தந்தந் தனத்தந்தந்
தனத்தந்தந் தனத்தந்தந்
தனத்தந்தந் தனத்தந்தந் — தனதான.

கருப்பந்தங் கிரத்தம்பொங்
கரைப்புண்கொண் டுறக்கும்பெண்
களைக்கண்கொண் டழைக்குஞ்செய் றவமேடே
வெப்புண்டுஞ் சிலுப்புண்டும்
பிணிப்புண்டுந் துவக்குண்டுந்
களிப்புண்டுந் தியக்குண்டுந் தடுமாறிச்
செருத்தண்டந் தரித்தண்டம்
புயத்தண்டங் களைறகொண்டுஞ்
செயிர்த்தஞ்சுஞ் செகத்தஞ்சுங் கொடுவாயத்
தியக்கங்கொண் டயக்கொண்டன்
புகழ்ப்பங்கம் பிறப்பக்கஞ்
சிதைத்துந்தன் பதத்தின்பந் தருவாயே.

யருக்கன்சஞ் சரிக்குந்தெண்
டிரைக்கண்சென் றரக்கன்பண்
பனைத்தும்டு பான் றீடக்கன் றங் கதிர்வேலா
வரிக்குஞ்சங் களிக்குஞ்சண்
பசுக்கொம்பெண் டிசைக்குங்கோங்
களிக்குஞ்செந் திலிற்றங்கும் குமரேசா
புரக்குஞ்சங் கரிக்குஞ்சங
கரிக்குஞ்சம் புவுக்கும்பின்
புவிக்குந்தண் டனக்குந்தஞ் சமதானப்
புனக்குன்றந் துவைக்குஞ்செந்
தினைப்பைம்பொன் புனக்கொம்பின்
புயத்தின்கொங் கையிற்றங்கும் பெருமாளே.

---

122. தானதான தனந்தன தந்தன
தானதான தனந்தன தந்தன
தானதான தனந்தன தந்தன—தனதானா.

மாயவாடை திமிர்ந்திடு கொங்கையின்
மூடுசீலை திறந்துமழுங்கிகள்
வாசல்தோறு நடந்துசிணுங்கிகள் பழையோர்வே
வாலநேச நினைத்த வழும்தக
ளாசைநோய்கொண் மருந்திடுகண்டிகள்
வாரபேர்பொருள் கண்டுவிரும்பிக ளெவரேனும்.

நேயமேகவி கொண்டுசொல்மிண்டிகள்
காசிலாதவர் தங்களையன்புற
நீதிபோல நெகிழ்ந்தபரம்பிக ளவர்தாய்மார்
நீலிநாடக மும்பயில் முண்டைகள்
பாளையூறுக ளுண்டிடு தொண்டிகள்
தீசெரோடுபி ணங்கு கடம்பிக ளுறவாமோ
பாயுமாமத தந்தி முகங்கொடு
மாதிபாரத மென்ற பெருங்கதை
பாரமேருவி னன்று வரைந்தவ னிளையோனே
பாலின்மொழி வஞ்சி யிளம்பிடி
தேவயானை பெருந்தன குங்கும
பாரமானமத சந்தன முங்கும மணிமார்பா
சீயமாயுரு வங்கொடு வந்தசு
ரேசன்மார்பை யிடந்து பசுங்குடர்
சேரவாரி யணிந்த நெடுப்புயன் மருகோனே
தேனுலாவு கடம்ப மணிந்தகி
ரீடசேகர சந்திரர் மைந்தசொல்
தேவர்நாயக செக்திலு வந்தருள் பெருமாளே.

123. தனன தந்ததந்த தனன தந்ததந்த
தனன தந்ததந்த— தன தான.

முலைமுகந்திமிர்ந்த கலவையுந்துலங்கு
முறுவலுங்களிந்த கனிவாயு

முருகவிந்துதிர்ந்த குவளையுஞ்சரிந்த
முகிலுமின்பகிங்கி விழிவேலுஞ்
சிலைமுகங்கலந்த திலதமுங்குளிர்ந்த
திருமுகந்ததும்பு குருவேர்வுந்
தெரியவந்துநின்ற மகளிர்பின்சுழன்று
செயலழிந்துழன்று விடுவேனை
மலைமுகஞ்சுமந்த புலவர்செஞ்சொல்கண்டு
வழிதிறந்தசெங்கை வடிவேலா
வளர்புனம்பயின்ற குறமடந்தைகொங்கை
மணிவடம்புதைந்த புயமேலே
யலைமுகத்துவந்த சிலைமுதிர்ந்தகெங்கை
யலறிநொந்துகஞ்ச மலர்மீதே
யளிகலந்திரங்கி யிசையுடன்றயின்ற
வரியசெந்தில்வந்த பெருமானே.

---

124. தனதன தனதன தந்தத்தந்தத்
தனதன தனதன தந்தத்தந்தத்—தனதான.

பரிமள களபசு கந்தச்சந்தத் தனமானார்
படையமர் படையென வஞ்சிக்குங்கட்கடையாலே
வரியளிநிரைமுரல் கொக்குக்குங்குற் குழலாலே
மறுகிடு மருளனை யின்புற்றன்புற் றருள்வாயே
பரிதிரு மருகக டம்பத்துங்கத் திருமார்பா

வல்லிரு திருவினை வெம்பிக்கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக்குஞ்சற் குருநாதா
செயசெய செயசெய செந்திற்கந்தப் பெருமாளே.

125. தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன—தனதானா.

அஞ்சத்துடனொரு நெஞ்சிற்பலநினை
வஞ்சிக்கொடியிடை மடவாரும்
அந்திப்புதல்வரும் வந்திக்கிளையுடன்
மன்றற்குதவிய வகைகூடா
வெஞ்சக்கலைபயி பஞ்சிப்பழுவடை
வங்கிக்கிறையென வடன்மேவா
வன்றிப்பவழுறும் வென்றிச்சமன்வரு
மன்றைக்குனதடி தரவேணும்
கஞ்சப்பிரமனை யஞ்சத்துயர்செய்து
கன்றைச்சிறு மயில்வீரா
கண்டத்தொளிவிட மண்டர்க்கருளிய
கந்தப்புளகித முருகோனே
செஞ்சொற்புலவர்க ளின்சொற்பகர்வல
சிந்தைக்குதவிய குமரேசா
செம்பொற்சோதிமுடி குன்றப்பொடிசெய்து
செந்திற்பதிவரு பெருமாளே.

126. தந்ததன தந்ததந்த தந்ததன தந்ததந்த
தந்ததன தந்ததந்த—தனதான.

கண்டுமொழி கொம்புகொங்கை
வஞ்சியிடை யம்புநஞ்சு
கண்கள்குழல் கொண்டலென்று பலகாலுங்
கண்டுளம் கருந்திநின்று
மங்கையர் வசம்புரிந்து
கங்குல்பக லென்றிரண்டு பொழுதாலே
பண்டைவினை கொன்றுமுன்று
வெந்துவிழு கின்றகண்டு
பங்கய பதங்கள்தந்து புகழோதும்
பண்புடைய சிந்தையன்பர்
தங்களி னுடன்கலந்து
பண்புபெற வஞ்சலஞ்ச லெனவாளாய்
வண்டுபடு கின்றதொங்கல்
கொண்டறநெ ருங்கியிண்டை
வம்பிணை யடர்ந்துசந்தின் மிகமூழ்கி
வஞ்சியை முனிந்தகொங்கை
மென்றகுறம டந்தைகொங்கை
வந்தழ குடன்கலந்த மணிமார்பா
திண்டிறல் புனைந்தவண்டர்
தங்கள் பயங்கள்கண்டு
செஞ்சர மணிந்ததுங்க மயின்மீதே

சென்றசுர ரஞ்சவென்று
குன்றினின் மணம்புணர்ந்து
செந்திநகர் வந்திருந்த பெருமாளே.

---

127. தானதனதான தானந்தனதந்த
தானதனதான தானந்தனதந்த
தானதனதான தானந்தனதந்த—தனதான.

மூளும்வினைசேர மேல்கொண்டிடாவைந்து
பூதம்வெகுவாத மாயங்கடா நெஞ்சின்
மூடநெறியேது மோகமிஞ்சியேவந்து மதிபாவ
மோகனெனஞான பேதஞ்செய்தேயண்டர்
தேடவறிதாய நேயகங்களாநின்ற
மூலபரயோக மேல்கொண்டிடாநின்ற துளதாகி
நாளுமதியோக நால்கொண்டுமாவண்ட
வாதியனலூடு போய்வென்றிவானின்க
ணுமமதின்மீதி லுறங்கலாவின்ப வமுதூறல்
நாடியதன்மீது போய்நின்றவானந்த
மேலைவெளியேறி நானன்றி நீயன்றி
நாடியவன்வேறுதானன்றி வாழ்கின்றதொருநாளே
காளவிடமூணி மாதங்கிவெதஞ்சொல்
பேதைநெடுநீலி பாதங்களால்வந்த
காலன்விழமோது சாமுண்டி பாரம்பொடனல்வாயு

காதிமுதிர்வான மேதங்கிவாழ்வஞ்சி
யாடல்விடையேறி பாகங்குலாமங்வக
காளிநடமாடி நாளன்பர்தாம்வந்து தொழுமாது

வாளமுழுதாளு வோர்தண்டுழாய்தங்கு
சோதிமணிமார்ப மாலின்பிளுளின்சொல் [னே
வாழுமுமைமாதராள்மைந்தனே யெந்தையினையோ

மாசிலடியார்கள் வாழ்கின்றவூர்சென்று
தேடிவிளையாடி யேயங்கனேநின்று
வாழுமயில்வீரனெசெந்தில் வாழ்கின்றபெருமாளே

---

128. தந்தனதானன தானனதந்தன தானனதானன
தந்தனதானன தானன—தனதான.

கொம்பனையார் காதுமோதிரு
கண்களிலா மோதுசீதள
குங்குமபா டீரபூஷண நகமேவு

கொங்கையினீ ராவிமேல்வளர்
செங்கழுநீர் மாருசூடிய
கொண்டையிலா தாரசோபையில் மருளாதே

யும்பர்சுவா மீநமோநம
வெம்பெருமா னேநமோவிப
வெண்கொடிமோ காநமோநம வெனநாளு

முன்புகழ்வாய் பாடிநாளினி
யன்புடனெ சாரபூசைசெய்
தூய்ந்திடவி னைபடாதருள் புரிவாயே
பம்பரமே போலவாடிய
சங்கரிவே தாளநாயகி
பங்கயசீ பாதநாபுரி இறைவோனே
பக்கமிலா நீடிமோடிய
பகைகரிமா காளிபோகினி
பண்டுசுரா பானசூரரொ டெதிர்போர்கள்
பெட்புதல்வா வாழிவாழியே
னும்படிவீ றனவேல்கர
வென்றமுளா னேமனோகர மயிலூரா
இன்சொல்விசா காக்ருபாகர
செந்தில்வாழ் வாகியேயடி
யென்றனையீ டேறவாழ்வருள் பெருமாளே.

129. தந்ததானன தனதன தனதன
தந்ததானன தனதன தனதன — தனதான.

பஞ்சபாதக முறுபிறை யெயிறெரி
குஞ்சிக்கூர்விட மதர்விழி பலமிகு
குங்கவாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்

மிஞ்சபாசமு மருவிய கரதல
மிஞ்சிநீடிய கருமுகி லுருவொடு
பண்பிலாதொரு பகடது முதுகினில் எமராசன்

அஞ்சவேவரு மவசர மதிலொரு
தஞ்சமாயிவண் வழிவழி யருள்பெறு
மன்பினுனை தடிபுக ழடிமைத னெதிரேநீ

யண்டகோளகை வெடிபட விடிபட
வெண்டிசாமுக மிடிதர நடமிடு
மந்தமாருத மயில்மிசை நொடியினில் வருவாயே

மஞ்சுபோல்வள ரளகமு மிளகிய
ரஞ்சிதாம்ருத வசனமு நிலவென
வந்துதூயவெண் முறுவலு மிருகுழை யளவோடு

மன்றனீலமு மழகிய நெடுகிய
குன்றவேடுவர் மடமக ளிளமுலை
மந்தராசல மிசைதுயி லழகிய மணவாளா

செஞ்சொல்மாறிசை வடதிசை குடதிசை
விஞ்சுகீழ்திசை சகலமு மிகல்செய்து
திங்கள்வேணிய ரடியிணை தொழுதுயர் மகமேரு

சென்றமோதின வாசரு ளதிபதி
தொண்டனாகியும் வழிவழி நெறிபெரு
செந்தின்மாநக ரினிதுறை யமர்கள் பெருமாளே.

130. தந்தன தனன தன தத்தான
தந்தன தனன தன தத்தான
தந்தன தனன தன தத்தான — தனதான.

சந்தனசவாதுநிறை கர்ப்பூர
குங்குமபடீர விரை கஸ்தூரி
தண்புழு களாவுகள பச்சீத வெகுவாகச்

சண்பககலாரவகு ளத்தாம
வம்புதுகிலாரவயி ரக்கோவை
தங்கியகடோதர விஸ்தார மரிதான

மந்தசம தானதன மிக்காசை
கொண்டுபொரு டேடுமதி நிஷ்டூர
வஞ்சகவிசாரவித யப்பூவை யணையார்கள்

வந்துதருமாயவிர கப்பார்வை
யப்பிலுளம்வாடுமெறி வற்றேனை
வந்தடிமையாளவினி யெப்போது நினைவாக

யிந்த்ரபுரிகரவன்முதன் மைக்கார
சம்ப்ரமமயூரதுர கக்கார
வென்றுமகலாதவிள மைக்கார குறமாதி

னின்பவனுபோகசர சக்கார
வந்தவசுரேசர்கல கக்கார
வெங்களுமைசேயினரு மைக்கார மிகுபாலின்

செந்தமிழ்சொல்நாலுகவி தைக்கார
குன்றெறியும்வேலின்வலி மைக்கார
செஞ்சொலடியார்கள் எளிமைக்கார வெழின்வேசு
திங்கண்முடி நாதர்சமை யக்கார
மந்த்ரவுபதேசமகி மைக்கார
செந்திநகர்வாழுமரு மைத்தேவர் பெருமாளே.

131. தந்ததனதான தானத்தான
தந்ததனதான தானத்தான
தந்ததனதான தானத்தான—தனதானா.

முந்துதமிழ்மாலை கூடக்கோடி
சந்தமொடுநீடு பாடப்பாடி
மொய்ம்பர்பனைவாசல்தேடித்தேடியுரையாதே
முந்தைவினையேவ ராமற்போக
மங்கையர்கள் காதல்தூரத்தேக
முந்தடிமையேனை யாளத்தானென் முனமீதே
திந்திமிதிதோதி தீதித்தீதி
தந்தனதான தானத்தான
செஞ்செணகுசேகு தாளத்தோடு நடமாடு
செஞ்சிறியகால்வி சாலத்தோகை
துங்கவனுகூல பார்வைத்தீர
செம்பொன்மயில்மீதிலேயிப்போது வருவாயே

யந்தமறைவேள்வி காவற்கார
செந்தமிழ்சொல்பாவின் மாலைக்கார
வண்டருபகார சேவற்கார முடிமேலே
யஞ்சலிசெய்வோர்கள் நேயக்கார
குன்றுருவமேவும் வேலைக்கார
வந்தவெகுவான நூபக்கார வெழிலான
இந்துரமின்மேவு போகக்கார
விந்தைதகுறமாது வேளைக்கார
செஞ்சொலடியார்கள் வாரக்கார வெதிராளு
நெஞ்சமறைமாயு மாயக்கார
துங்கரணசூரர் சூறைக்கார
செந்திநகர்வாழுமாண்மைக்கார பெருமாளே.

---

132. தனதனன தாந்தனந்தத் தனதனன தாந்தத்
தனதனன தாந்தனந்தத்—தனதான.

தகரநறை பூண்டவிந்தக்
குழலியர்கள் தோய்ந்தவின்பத்
தளருமிடை யேந்துதங்கத் தனமோதர்
தமைமனதில் வாஞ்சைபொங்கக்
கலவியொடு சேர்ந்துமந்தச்
சமயசிவ நீந்திபிந்தப் படிநாளும்
புகலரிய தாந்திரிசங்கத்
தமிழ்பனுவ லாய்ந்துகொஞ்சிப்
புவியதனில் வாழ்ந்தவஞ்சத் தளருடர்

புனிதமிலி மாந்தர்கங்கட்
புகழுமெளி யென்றனுன்பொற்
புளகமலர் பூண்டுவந்தித் திடுமேவேனு
தகுடதரு தாந்திமிந்தத்
திகுடதிகு தீந்திமிந்தித்
தகுகணக தாங்கணங்கத் தனதானு
தனதனன தாந்தனந்தத்
தெனநடன மான்றதுங்கத்
தனியமயிலை யூர்ந்தசந்தத் திருமார்பா
சிகையசுரர் மாண்டழுங்கத்
திறலயிலை வாங்குசங்கத்
திமையவரை யீன்றமங்கைக் கொருபாலா
திகழ்வயிர மேந்துகொங்கைக்
குறவனிதை காந்தசந்நரச்
சிகரமுக லோங்குசெந்திற் பெருமாளே.

133. தானதந்தன தானுதானன
தானதந்தன தானுதானன
தானதந்தன தானுதானன—தனதானு.

தோடுமெனகுழை யூடேபோரிடு
வாணெடுங்கயல் போலேயாருயிர்
கூறுகொண்டிடுவேல் போலேதொடர் விழிமாது

நாதகந்தனி லேமாலாயவர்
காதலொன்றறி யாதேயூழ்வினை
சூழும்வெந்துப ராலேதானுயிர் சுழலாதே
யாடுவெம்பண மார்நீள்காரர
ஆடும்கண்டிட மெல்வீழ்த்தோகையி
லாடும்வண்குழ ரேசர்வாருறி புயவேளை
யாருநின்னரு ளாலேதாடொழ
ஆண்மைதந்தருள் வாழ்வேதரழ்வுற
வாழிதந்தவ னாயேன்வாழ்வுற வருள்வாயே
போடும்வெங்கதி ரோடேசோமனுக்
ஊழியண்டமு லோகாலோகதை
பூருமிந்திர ஞானதேவரு மடிபேண
ஆழிடும்புயன் வேலாவாலய
மூடிதங்கிய மாலாயாரண
வோதவெண்டிசை சூர்மார்பூடுற விடும்வேலா
வேடுகொண்டுள வேடர்வேடைய
வேழம்வெம்புலி போலேவேடர்கள்
மேவுதண்புன மீதேமாலெரடு மிதன்மேவி
மேகமென்குழ லாயநீவாவென
மேவுகந்தசுவா மீவாதமிழ்
வீறுசெந்திலின் மீதேமேவிய பெருமாளே

134. தந்ததனன தனனு தனனதன
தந்ததனன தனனு தனனதன
தந்ததனன தனனு தனனதனு— தனதானு.

தொந்திசரிய மயிரே வெளிற்நிறை
தந்தமலைப வுடலே வளைவினொடு
தொங்கவொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி

தொண்டுகிழவ னிவனு ரெனவிருமல்
கிண்கிணென முறையே குழறவிழி
துஞ்சுகுருடு படவே செவிடுபடு செவியாகி

வந்தபிணியு மதிலே மிடையுமொரு
பண்டிதனுமெ யுறவே தலையுமிள
மைந்தருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி

மங்கையழுது விழவே யமபடர்கள்
நின்றுசருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுதுகடிதே மயிலின்மிசை வருவாயே

எந்தைவருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே யினிவருக
வென்சண்வருக வெனதா ருயிர்வருக வயிராம

விங்குவருக வரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூ டுகவருக
வென்றுபரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்

சிந்தைமகிழு மருகாகுறவரிள
வஞ்சிமருவு மழகா வமரர்சிறை
சிந்தவசுரர் கிளைவே ரொடுமடிய வடிவேலா

திங்களரவு நதிசூ டியபரமர்
தந்தகுமா வலையே கரைபொருத
செந்திநகரி லினிதே மருவிவளர் பெருமாளே.

135. தனத்தந்தத் தனத்தந்தத் தனத்தந்தனத்தந்
தனத்தந்தத் தனததந்தத்—தனதானா.

பருத்தந்தத் தினைத்தந்திட்
டிருக்குங்கச் சதுர்த்துந்திப்
பரிக்கும்பொற் பிரபைக்குன் றத் தனமானார்

பறிக்குந்துற் சரக்கொங்கத்
தினைத்தங்குற் பலப்பண்டைப்
பறக்குஞ்சக் கரத்தஞ்சத் தியைநேருந்

துரச்செங்கட் கடைக்கொன் றிங்
கொருத்தன்புற் றினித்தங்குத்
துணிக்கும்புத் தியைச்சிங்கித் தறியேனைத்

துணைச்செம்பொற் பதத்தின்புற்
றெணக்சென்றப் பொருட்டங்கத்
தொடுக்குஞ்சொற் றமிழ்த்தந்தப் படியாள்வாய்

தறுத்தங்கிப் பலத்தண்டத்
திணைக்கொண்டச் சரர்க்கஞ்சத்
தடர்த்துன்பத் திணைத்தகிட் டெதிர்சூரன்
சமர்க்கெஞ்சிப் படித்துஞ்சக்
கதிர்த்துங்கத் தயிற்கொண்டெத்
தலத்தும்பொற் பதிக்கன்புற் றருள்வோனே
திருக்கஞ்சத் திணைக்கண்டித்
துரக்குங்குட் டகட்டுஞ்சிற்
சிவக்கன்றப் பொருட்கொஞ்சிப் பகர்வோனே
செயத்துங்கக் கொடைத்துங்கத்
திருத்தங்கித் தரிக்கும்பொற்
றிருச்செந்திற் பதிக்கந்தப் பெருமாளே.

---

136. தந்தா தந்தா தந்தா தந்தா
தந்தா தந்தத்—தனதானா.

வெங்கா ளம்பா ணஞ்சேர் கண்பால்
மெண்பா கஞ்சொற் குயின்மாலை
மினதே சந்தா னென்றே கொண்டரர்
மென்றே ளொன்றப் பொருள்தேடி
வங்கா ளஞ்சோ ழஞ்சீ னம்போய்
வம்பே துன்பப் படலாமோ
வள்கா லன்றா தென்பால் வந்தால்
வந்தே யந்தப் பொழுதாள்வாய்

கொங்கார் பைந்தே னுண்டே லண்டார்
குன்ருள் கொங்கைக்
குன்ரே டுங்கூ ரென்பா குந்தாள்
குன்ரு மண்டப் பொருவோனே
கங்கா ளஞ்சேர் மொய்ம்பா ரன்பார்
கன்றே யும்பர்க் கொருநாதா
கம்பூர் சிந்தா ரன்பால் வந்தாய
கந்தா செந்திற் பெருமாளே.

187. தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த— தனதான.

விதிபோ லுமந்த விழியா லுமிந்து
நுதலா லும் வென்றி யிளையோர்தம்
விரிவானசிந்தை யுருவாகநொந்து
விறல்வேறு சிந்தை வினையாலே
விதமாடியின்ப மதுபோதவுண்டு
விருகாளு மொன்று முளமாத
இருளாயதுன்ப மருண்மாயம்வந்து
வைமையிர்வ தென்று மொழியாதோ
மதிசூடியண்டர் பதிவாழமண்டி
வருமாலமுண்டு மறமாரன்

வடிவாகவைந்து கணையோடுசிந்தும்
வகைநாடுமெந்தை பெருவாழ்வே
யதிமாயமொன்றி வருசூரர்போன்ற
வயில்வேல்கொடன்று பொரும்வீரா
வழகானசெம்பொன் மயின்மேலமர்ந்து
வலைவாயுகந்த பெருமாளே.

---

138. தனதானதந்த தனதானதந்த
தனதானதந்த — தனதான.

விறன்மாரனைந்து மலர்வாளிசிந்த
மிகவானலிந்து வெயில்காய
மிகவாடைவந்து புலவேலையொன்றை
வினைமாதர்தந்தம் வசைகூறக்
குறவாணர்குன்றி லுறைபேதைகொண்ட
கொடிதானதுன்ப மயல்தீரக்
குளிர்மாலையின்க ணளிர்மாலைதந்து
குறைதீரவந்து குறுகாதோ
மறிமானுகந்த விறையோன்மகிழ்ந்து
வழிபாடுகந்த மதியாளா
மலைமார்புசித்த வலைவேலையஞ்ச
வடிவேலையுந்து மதிகோபா
வதிவாலறிந்து னிருதாளிறைஞ்சு
மடியாரிடைஞ்சல் களைவோனே

பாகரனை செம்பொன் மயில்மேலமர்ந்து
லைவாயுகந்த பெருமாளே.

---

130. தனதன தனன தனத்தத்த தன
தனதன தாதன தனத்தத்தா தன
தனதன தானன தனத்தத்தா தன-தந்ததான.

இருள்விரிகுழலை விரித்துத்தூற்றவு
மிருகுதுகிலை நெகிழ்த்துச்காட்டவு
மிருகடைவிழியு முறுக்கிப்பார்க்கவு மைந்தரோடே

யியல்பினவதனை நடித்துக்கேட்கவு
மறுமொழிபலவு மிசைத்துக்காற்றவு [டே
மிடையிடைசிறிது நகைத்துக்காட்டவுந் தங்கள்வீ

வருகெனவொருசொ லுரைத்துப்பூட்டவும்
விரிமலரமளி யணைத்துச்சேர்க்கவும்
வரிபொருளளவி லுருக்கித்தேற்றவு நிந்தையாலே

வளமனைபுகுதி லடித்துப்போக்கிடு
மொருதலைமருவு புணர்ச்சித்தூர்த்தனை [ளோர
வசைவிடநினது பகைத்துப்போற்றுவ தெந்தநா

குருமணிவயிர மளித்துக்கோட்டிய
கனமுடவுருவில் வெளுத்துத்தோற்றிய
குளிரிசையருவி மொழித்துத்தூற்றிய மண்டிநீரூர்

குழிபடுகலுழி வயிற்றைத்தார்த்தெழு
திடர்மணலிறுகு துருத்திக்காய்ப்பொதி
குளிர்நிழலருவி கலக்கிப்பூப்பிணை வண்டலாட

முருகவிழ்திணைக ளுடுத்துக்காய்த்தினை
விளைநடுவதனி லிருப்பைக்காட்டிய [வே
முகின்முலையிளைய குறத்திக்காட்படு செந்தில்வாழ்

முனையிளமதியை யெடுத்துச்சாத்திய
சடைமுடியிறைவர் தமக்குச்சாத்திர [னே
முறையருண் முருக தவத்தைக் காப்பவர் தம்பிரா

---

140. தந்ததந்த தந்ததந்த தந்ததந்த தந்த
தந்ததந்த தந்ததந்த—தனதான.

வந்துவந்து முயன்றவழ்ந்து
வெஞ்சுகந்த யங்கிநின்று
கொஞ்சிகொஞ்சி யென்றழுங் குழந்தையோடு

மண்டலங்குலுங்கவந்து
விண்டலம்பிளந்தெரிந்து
செம்பொன்மண்டலங்களும் பயின்றவீடு

கொந்தலைந்து குந்தளைந்து
குங்குமந்த யங்குகொங்கை
வஞ்சிதஞ்ச மென்றவர்கண் மங்குகாலங்

கொங்கடம்பு கொங்குபொங்கு
பைங்கடம்பு தண்டைகொஞ்ச
செஞ்சுவந்து தங்குபங்கு வந்துதாராய்
சந்தடர்ந்தெ ழுந்தரும்பு
மந்தரஞ்செ ழுங்கரும்பு
கந்தரம்பை மந்தரஞ்சொல் செந்தில்வாழ்வே
அண்டகண்க டந்துசென்று
பண்கடங்க டந்தவின்சொல்
திண்புனம்பு குந்துகண் டிறைஞ்சும்வேலா
சிவந்துகண்க லங்கவந்து
சந்தரங்க லந்துசிந்து
ரஞ்சிதந்து லந்தலம்பு ரிந்தமார்பா
அம்புனம்பு குந்துநண்பர்
சம்புநம்பு ரந்தரந்த
ரம்பலங்கு மம்பரெங்கள் தம்பிரானே.

---

141. தனத்ததந்தன தனதன தந்தத்
தனத்ததந்தன தனதன தந்தத்
தனந்ததந்தன தனதன தந்தத்—தனதானு.

உரைத்தசம்ப்ரம வடிவுகலங்கிக்
கறுத்தகுஞ்சியும் வெளிறியபஞ்சிட் [டாகி
டொலித்திடிஞ்செவி செவிடெனவெங்கட்குரு

யுரைத்தவெண்பலு நழலிமதங்கெட்
டிரைத்தகிண்கிணெணிருமவெழும்பித்[கொண்
திணைப்புடன்றலை கிறுகிறெனும் பித்தமுமேல்

டரத்தவிஞ்சிய புழிவினும்விஞ்சப்
பழுத்துளஞ்செயல் பவளவிரும்புக் [வோரு
கடுத்தபெண்டிரு மெதிர்பொரு நிந்தித்தனை

மசுத்தனென்றிட வுணர்வதுகுன்றித்
துடிப்பதுஞ்சில வுளதெனவுங்கட் [யே
டவத்தைவந்துயிரலம்வருமன்றைக் கருள்வா

திரித்திரிந்திரி ரிரிரிரியென்றிட்
டுடுட்டுடுண்டுடு டுடுடுண்டிட்
டிகுட்டிகுண்டிகு டிகுடிகுவென்றிட் டடிபீத

திகுத்திகுந்திகு திகுதிகுவென்றிட்
டிடக்கைதுந்துமி முரசுமுழங்கச்
செருக்களம்புகு நிருதர்தயங்கச் சிலபேய்கள்

தரித்துமண்டையி லுதிரமருந்தத்
திரட்பருந்துகள் குடர்கள்பிடுங்கத்
தருக்குசம்புவ நிணமதுசிந்தப் பொரும்வேளா

தளர்ச்சிகண்டினி யருளுடனன்பர்க்
கழைத்திடுங்க்ருபை மயில்வரைசொம்பொற்
றழைத்தசெந்தியி லுறைதருகந்த பெருமாளே

142. தானதந்தத் தானதந்தத்
தானதந்தத்—தன தான.

ஓராதொன்றைப் பாராதந்தத்
தோடேவந்திட் டுயிர்சோரா
ஆடாரன்றற் றார்போல்நின்றேட்
டாமல்தந்திட் டுழன்மாதர்

கூராவன்பிற் சோராநின்றக்
கோயாநின்றுட் குலையாதே
கோடார்செம்பொற் றோளாய்நின்சொற்
கோடாதென்கைக் கருள்தாராய்

தோராவென்றிப் போராய்மன்றற்
றேளாய்குன்றத் தொளேயாடி
சூதாவென்றிக் கோவாழ்வஞ்சச்
சூர்மாவஞ்சப் பொருவேலா

சீரார்கொன்றைத் தார்மார்பொன்றச்
சேவேறெற்குக் கினியோனே
தேனேயன்பர்க் கேவாவின்சொற்
சேயேசெங்கிற் பெருமாளே.

திருவதிகை.

143. தன்னதனத் தனனதனத் தனனதனத்தனத்
தனனதனத் தனனத்—தனதான.

ப்ரவுவரிச் கயல்குவிய குயில்கிளியொத் துறைபதற
பவளநிறத் ததரம்விளைத் தமுதூறல்
பருகிநிறத் தரளமணிக் ;களபமுலைக் குவடசையப்
படைமதனக் கலையடவிப் பொதுமாதர்
சொரியுமழை குழல்சரிய தளர்வுறுசிற் றிடைதுவள
துகிலகலக் க்ருபைவிளைவித் துருகாமுன்
சொரிமலர்மட் டறையணைபுக் கிதமதுரக் கலவிதனிற்
சுவறுமனக் கவலையொழித் தருள்வாயே
கருகுநிறத் தசுரன்முடித் தலையொருபத் தறமுடுகிக்
கணைதொடுமச் சுதன்மருகக் குமரேசா
கயிலைமலைக் கிழவனிடக் குமரிவிருப் பொடுகருதக்
கலைநிறையப் பெறும்வரிசைப் புலவோனே
திரள்கமுகிற்; றலையிடறிப் பலகதலிக் குலைசிதறிச்
செறிவயனெற் கதிரலையத் திரைமோதித்
திமிதிமெனப் பறையறையப் பெருகு பனற்கெடில
நதித், திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே.

தில்லை.

144. தனன தன தனன தந்தத்-தன தான
தனன தன தனன தந்தத்— தன தான.

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலுநெஞ்சத் தலையாலே
பரமகுரு வருணினைந்திட் டுணர்வாலே
காவுதரி சனையையென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருகசெம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே.

திருவாவினன்குடி.

145. தனன தன தனன தந்தத்-தன தான
தனன தன தனன தந்தத்— தன தான.

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சகரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனோ

இபமா கன்றனுக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே

146. தானன தானன தானன தான
தானன தானன—தனதான.

ஏவினைநேர்விழி மாதரைமேவிய
வேதனை மூடனை நெறிபேணா
வீணனைவீணனை யேபெருதாமுழு
வேழையை மோழையை யகலாநீள்
வாவினைமூடிய நோய்பிணியாளனை
வாய்மையி லாளனை யிகழாதே
மாமணிநூபுர மேவியதாளிணை
வாழ்வுற வீவது மொருநாளே
நாவலர்பாடிய பாவிசையால்மகிழ்
நாரத னார்புகல் குறமாதை
நாடியகானிடை கூடியசேவக
நாயக மாமயில் வருவோனே
தேவர்கள்நாயக னாகியவீசுரர்
சேயென வேவரு முருகேசா

தேனுறைசோலையி னீழலிலேதிகழ்
சீரலை வாயுறை பெருமாளே

147. தனத்தந்தன தனத்தந்தன
தனத்தந்தன — தனதான.

நீசருட்டாலை மரிக்கும்பர
தவிக்குங்கொடி மதனேவிற்
றளைக்குந்தனி நிசைக்குஞ்சிறு
தமிழ்த்தென்றலி னுடனேசாநின்
றெரிக்கும்பிறை யெனப்புண்படு
மெனப்புன்கவி சிலர்பாடி
யிரக்குஞ்சிலர் திருச்செந்திலை
யுரைத்துய்ந்திட வறியாரே
அரிக்குஞ்சுரர் பதிக்கும்பிர
மனுக்கும்பரி புரிசீத
வடிக்குஞ்சடை முடிக்குந்திரு
வரைக்குந்தவ மிகமேவு
கிரிக்கும்பணி தரிக்குங்குழைப
வரைக்குங்குரு பரவாழ்வே
கிளக்குந்திற லரக்கன்கிளை
கெடக்கன்றிய பெருமாளே.

* புள்ளிருக்கும் வேளூர்.

148. தானதத்தனந் தானதத்தன
தானதத்தனந் தானதத்தன
தானதத்தனந் தானதத்தன---தனதான.

பாடகச்சிலம் போடுசெச்சைமணி
கோவெனக்கலந் தாடபொற்சரண்
பாவைசித்திரம் போலபட்டுடையி னிடைநூலார்

பாரபொற்றனங் கோபுரச்சிகர
மாமெனப்படந் தேமலுற்றொளிர
பாகுநற்கரும் போடுசர்க்கரையி மொழிமாதர்

ஏடகக்குலஞ் சேரமைக்குழலொ
டாடளிக்குலம் பாடநற்றெருவி
லேகிபுட்குலம் போலபற்பலசொ லிசைபாடி

வாகியிச்சகம் பேசிவெத்தியகம்
வாருமுற்பணந் தாருமிஞ்சுமென
வேணியொத்துவந் தேறளிட்டவர்க ளுறவாமோ

---

* புள்ளிருக்கும்வேளூர்என்பது-வைத்தீசுர்கோயில்

சேடனுங் [illegible] டானரக்கர்குல
மாளவிட் டிருந் தேடுமிலங்கை கடலைச்
சேரவிட் [illegible] கழுகாடி [illegible] தோண்மேற்

சேனைகட் [illegible] யான் புகழவிட்டுருடி-
யோர்கள்கட்டியம் பாடவெட்டரசர்
[illegible] தாமரைக்கிழமி புகல்வேலா

நாடகப்புனங் காவலுற்றசுக
மாதுநற் [illegible] தனகிரிவள்ளி
நாயகிக் [illegible] பாடிநிற்குமன்ன புயவேளே

ஞாலவெற்புகந் தாடுமத்தாதைய
னுயவிக் [illegible]
காதலித் [illegible] கமருள் பெருமாளே.

---

149. தத்தன தானதான தத்தன தானதான
தத்தன தானதான—தனதான.

எத்தனை கோடிகோடி விட்டுட லோடியாடி
யெத்தனை கோடிபோன தளவேதோ
இப்படி மோகபோக மிப்படி யாகியாகி
யிப்படி யாவதேது மினிமேலோர்

சித்திடர் சிசிசி ருத்திர மாயமாயை
　சிக்கினி லாயுமாயு　　　　மடியேனைச்
சித்தினி லாடலோடு முத்தமிழ் வானரோது
　சித்திரை ஞானபாத　　　　மருள்வாயே

நித்தமு மோதுவார்கள் சித்தமே வீடதாக
　நிர்த்தம தாடுமாறு　　　　முகவோனே
நிட்சள ரூபாபாதி பச்சிலை யால்மூறு
　நெட்டிலை சூலபாணி　　　　யருள்பாலா

பைத்தலை நீடுமாயி சத்தலை மீதுபீறு
　பத்திர பாதநீல　　　　மயில்வீரா
பச்சிலை பூதமானை செய்க்கயல் தாவுவேளூர்
　பற்றிய மூவர்தேவர்　　　　பெருமாளே.

---

150. தானன தானன—தந்ததான.

வாரிமீ தேயெழு　　　　திங்களாலே
　மாரவே ளேவிய　　　　வம்பினாலே
பாரெலா மேசிய　　　　பண்பினாலே
　பாவியே னாவிம　　　　யங்கலாமோ

நாகளின் மார்புதோ ளாந்தவேலா
சோதியே வெளுர மந்தகேரவே
சூரிமால் யானைய ணைந்தமார்பா
மவர்தே வாதிக டம்பிரானே,

வயலூர்.

151. தத்த தனதன தனனா தனனா
தத்த தனதன தனனா தனனா
தத்த தனதன தனனா தனனா—தனதானா.

செய்த்த சுழிகுழ லறலோ முகிலோ
பற்ப நறுநுதல் சிலையோ பிறையோ [றாம்
கெட்டயிணைவிழி பிணையோ கணையோ இனிதூ

றெக்க வமிழ்திதழ் கனியோ துவரோ
சுத்த மிடறது வளையோ கமுகோ
நிற்கு மிளமுலை குடமோ மலையோ வறவேதேய்ந்

தெய்த்த விடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை யாவோ ரதமோ
வெற்பொனடியிணை மலரோ தளிரோ எனவேமால்

இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமேதிரிவேன்
ரத்ன பரிபுர புருகா லொருகான் மறவேனோ

புத்தர் சமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க வனல்புன றிருவே டுயவே யுமையாடன்

புத்ர னெனவுரை பகர்வோன் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்பகவுணியர் பெருமா னுருவாய் வருவோனே

சத்தமுடையகண் முகனே குகனே
வெற்பி ரெறிசுடர யிலா மயிலா
சத்தி கணபதி பிளையா யுளையாய் ஒளிகூறும்

சக்ர வரிதிரு மருகா முருகா
வுக்ர விறையவர் புலவா முதல்வா
கட்ப முளநட வயலூ ரியலூர் பெருமானே.

திருப்புகழ்.

முற்றிற்று.

Cully
8677

இப்புத்தகமும், தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறுவர்கட்குரிய பலவிதபுத்தகங்களும் வேண்டியவர்கள், சென்னைப்புரசை சரவணப்பெருமாள் முதலி வீதி, 37-வது நெ. கிருஹத்தில் ஸ்தாபித்திருக்கும் நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையின் அதிபர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Clarks